1] சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பின் புதிய தலைவராக இந்தியாவின் நரிந்தர் பத்ரா தேர்வு செய்யப்பட்டார்.சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பின் (எப்.ஐ.எச்.,) தலைவராக ஸ்பெயினை சேர்ந்த முன்னாள் கோல்கீப்பர் லீன்டிரோ நீக்ரே இருந்தார்.

2] இந்தியாவும், சீனாவும் இணைந்து 6-வது கட்ட கூட்டு ராணுவப் பயிற்சி Hand In Hand, மஹாராஷ்டிரா மாநிலம் புனேவில் நவம்பர் மாதம் 15-ம் தேதி முதல் 27-ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

3] உலக சர்க்கரை நோய் தினம் [ 14.11.2016 ]

* இன்சுலின் கண்டுபிடித்த சார்லஸ் பென்டின் பிறந்த நாளான இன்று, உலகம் முழுவதும் சர்க்கரை நோய் தினமாக கொண்டாடப்படுகிறது.

* 2016ல் சர்க்கரை நோய் தினத்தின் நோக்கம், உலக அளவில் சர்க்கரை நோயை கண்காணித்து அதனால் ஏற்படும் விளைவுகளை தடுக்க முயற்சி எடுப்பதே ஆகும்.

4] இந்தியா-நேபால் இடையிலான 10 ஆவது இராணுவ நடவடிக்கை கூட்டு பயிற்சி சூர்யா கிரண் அக்டோபர் 31, 2016 முதல் 13 நவம்பர் 2016 வரை நேபாளில் நடைபெற்றது.

5] டெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் 36-வது இந்திய சர்வதேச வர்த்தக மாநாடு [ நவம்பர் 14 முதல் 18 வரை ] நடைபெறுகிறது. [ India International Trade Fair (IITF) ].

6] நவம்பர் 12: உலக நிமோனியா தினம் (நுரையீரலழற்சி).

* 2016 Theme: “Keep the Promise, Stop Pneumonia Now”.

* இந்தியாவில் நிமோனியா நோய் தாக்கம், தமிழகத்தை விட பீகார், மத்தியபிரதேசம், உத்திரப்பிரதேச மாநிலங்களில் அதிகம் உள்ளது.

7] பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெற்ற உலக மணிலா மாஸ்டர்ஸ் கோல்ப் போட்டியில் இந்திய வீரர் எஸ்.பி. சவ்ராசியா சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

8] நாட்டிலேயே முதன்முறையாக, புதுச்சேரியில் உள்ள நெல்லித்தோப்பு தொகுதிக்கு 19-ம் தேதி நடைபெறும் இடைத்தேர்தலில் தேர்தல் பணியில் ஈடுபடுபவர்கள், தபால் மூலம் வாக்களிக்கும் முறைக்கு பதிலாக ஆன்லைனில் தபால் ஓட்டுகளை பதிவு செய்யும் முறை அமலாகிறது.

9] குர்கான் மகளிர் ஓபன் கோல்ஃப் போட்டி: இந்தியாவின் இளம் வீராங்கனை அதிதி அசோக் 'சாம்பியன்'

* குர்கான்: குர்காவ்னில் நடந்த சர்வதேச மகளிர் ஓபன் கோல்ஃப் போட்டியில் 18 வயதேயான இளம் இந்திய வீராங்கனை அதிதி அசோக் 'சாம்பியன்' பட்டம் வென்று சாதனை படைத்துள்ளார்.

* தில்லியை அடுத்துள்ள குர்கானில் ஹீரோ ஹோண்டா மகளிர் ஓபன் கோல்ஃப் போட்டிகள் நடைபெற்று வந்தன. பல்வேறு நாட்டைச் சேர்ந்த வீராங்கனைகள் பங்கு கொண்ட இந்த போட்டித் தொடரில், இந்தியாவின் சார்பாக இளம் வீராங்கனை அதிதி அசோக் பங்கெடுத்திருந்தார்.

* பல கட்டமாக நடந்த இந்த போட்டியில் 18 வயதேயான பெங்களூரைச் சேர்ந்த அதிதி அசோக் 'சாம்பியன்' பட்டம் வென்று சாதனை படைந்துள்ளார். இந்தியாவைச் சேர்ந்த வீராங்கனை ஒருவர் மகளிர்

ஓபன் கோல்ஃப் போட்டி ஒன்றில் சாம்பியன் பட்டம் பெறுவது இதுவே முதல் முறையாகும்.

10] அக்டோபர் 29 / 2016 அன்று இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையே விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற 5வது ஒரு நாள் போட்டியில் கலந்து கொண்ட இந்திய அணிவீர்கள், தங்கள் அன்னையின் பெயர் பொறிக்கப்பட்ட பனியனை அணிந்து விளையாடினர்.

* டோனி -- தேவகி ., விராட் கோலி -- சரோஜ் ., ரோகித் சர்மா -- பூர்ணிமா.

* இந்த போட்டியில் அறிமுகமான இந்திய வீரர் ஜெயந்த் , இளவயதிலேயே தனது தாயை இழந்து வளர்ப்பு தாயிடம் வளர்ந்ததால் , தனது பனியனில் லட்சுமி & ஜோதி என தன் தாய் மற்றும் வளர்ப்பு தாய் இருவரது பெயரையும் பொறித்து விளையாடினார்.

11] Asian Ministerial Conference on Disaster Risk Reduction -- AMCDRR

பேரிடர்கால அபாயங்களை குறைப்பதற்கான ஆசிய நாடுகளின் அமைச்சர்கள் அளவிலான 3 நாள் மாநாடு, டெல்லியில் நவம்பர் 03 முதல் 05 வரை நடைபெற்று முடிந்துள்ளது.

12] உலக சுகாதார நிறுவனத்தின் சார்பிலான புகையிலை கட்டுப்பாடு தொடர்பான சர்வதேச மாநாடு , நொய்டாவில் நவம்பர் 07 முதல் 12 வரை நடைபெற்று முடிந்துள்ளது.

* இம்மாநாட்டின் சிறப்பு விருந்தினராக இலங்கை அதிபர் மைத்ரி பால சிரிசேனா கலந்து கொண்டுள்ளார்.

13] அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு நிறுவனம், கடந்த 1990-ம் ஆண்டு ஹப்பிள் என்ற அதிநவீன தொலைநோக்கியை விண்ணில் செலுத்தியது.

* அந்த தொலைநோக்கி கடந்த 26 ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான அரிய படங்கள், தகவல்களை அனுப்பி உள்ளது. இதன்மூலம் பூமிக்கு அப்பால் உள்ள கிரகங்கள், நட்சத்திரங்கள், சூரிய குடும்பங்கள் உட்பட பல்வேறு அரிய தகவல்கள் கிடைத்தன.

* இந்நிலையில், ஹப்பிள் தொலைநோக்கியை விட 100 மடங்கு சக்திவாய்ந்த " ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலை நோக்கி "யை ஐரோப்பிய விண்வெளி ஆய்வு கழகம் மற்றும் கனடா விண்வெளி ஆய்வு கழகத்துடன் இணைந்து நாசா உருவாக்கி முடித்துள்ளது.

14] இத்தாலியில் நடைபெற்ற உலக கிக் பாக்ஸிங் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த 8 வயது சிறுமி தஜமுல் இஸ்லாம் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

15] செய்தி துளிகள்

◆◆◆◆◆◆◆◆◆

01) அமெரிக்காவில் நடைபெற்ற உலக குத்துச்சண்டை போட்டியின் வெல்டர் வெயிட் பிரிவில் பிலிப்பைன்சின் மன்னிபாகியோ சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

02) ஜூன் 28 / 2014ல் இடிந்து விழுந்த மவுலிவாக்கம் அடுக்குமாடி கட்டிடத்தின் அருகில் இருந்த 11 மாடி கட்டிடம், உச்ச நீதிமன்ற உத்தரவின் பேரில் நவம்பர் 02 / 2016 அன்று Maglink Infra Projects, Tirupur. என்ற நிறுவனத்தாரால், உள்தகர்ப்பு முறையில் (implosion) வெடி வைத்து தகர்க்கப்பட்டது.

03) பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த ராணுவ விபரங்களையும் , ரகசியம் காக்கப்பட வேண்டிய முக்கிய தகவல்களையும் பகிரங்கமாக வெளிச்சம் போட்டு காட்டியதான குற்றச்சாட்டின் பேரில் NDTV இந்தி சானலுக்கு நவம்பர் 09ம் தேதி ஒருநாள் முழுவதும் ஒளிபரப்பு செய்ய தடைவிதித்து மத்திய செய்தி மற்றும் ஒளிபரப்பு துறை அமைச்சகம் உத்தரவிட்டது.

* இதற்கு உச்சநீதிமன்றம் இடைக்கால தடை வதித்துள்ளது.

* இதே போன்று அஸ்ஸாம் மாநிலத்தின் News Time Assam மற்றும் Care World TV ஆகியவற்றிற்கும் , கேபிள் TV ஒழுங்குமுறை சட்டத்தின் கீழ் நவம்பர் 09 முதல் 7 நாட்களுக்கு தடை விதித்து மத்திய செய்தி மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

04) நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் DRS முறை ( The Umpire Decision Review System ) இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான ராஜ்கோட் டெஸ்ட் போட்டியில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

16] கூகுள் நிறுவனம் நடத்திய Doodle 4 Google போட்டியில் Live in the present என்ற தலைப்பில் புனேவை சார்ந்த பள்ளி மாணவி Anvita Prashant Telang உருவாக்கிய Doodle ஐ , நவம்பர் 14 குழந்தைகள் தினத்தை முன்னிட்டு கூகுள் தனது முகப்பில் இடம்பெற செய்துள்ளது.

17] அமெரிக்க பார்லிமென்ட்டுக்கு நடந்த தேர்தலில், ஐந்து இந்தியர்கள் வெற்றி
பெற்றுள்ளனர்.

- அமெரிக்க பார்லிமென்ட்டின், கீழ் சபையான பிரதிநிதிகள் சபைக்கு, சியாட்டில் பகுதியில், இருந்து போட்டியிட்ட, பிரமிளா ஜெயபால், வெற்றி பெற்றார்; இதன் மூலம் அமெரிக்க பார்லிமென்டின்

பிரதிநிதிகள் சபை, எம்.பி.,யான முதல் இந்திய பெண் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

- கேரளாவை பூர்வீகமாக உடைய இவர், சென்னையில் சில காலம் வசித்துள்ளார்.

- இதேபோல், தமிழகத்தை பூர்வீகமாக உடைய, ராஜா கிருஷ்ணமூர்த்தி, சிகாகோவில் இருந்து பிரதிநிதிகள் சபைக்கு போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார்.

- பிரதிநிதிகள் சபைக்கு, கலிபோர்னியாவின் சிலிகான் வேலி எம்.பி.,யாக இருந்து வரும், அமி பெரா, மீண்டும் வெற்றி பெற்றார். அவர், குடியரசு கட்சி வேட்பாளர் ஸ்காட் ஜோன்சை தோற்கடித்தார்.இவர் குஜராத் மாநிலத்தை பூர்வீகமாக உடையவர். ஜனநாயக கட்சியில் தீவிரமாக பணியாற்றி வரும், இவர், அதிபர் ஒபாமா, இந்தியா வந்த போது உடன் வந்தார்.

- கலிபோர்னியாவின் மற்றொரு பகுதியில், ஜனநாயக கட்சியின் சார்பில் போட்டியிட்ட ரோஹித் கன்னா, வெற்றி பெற்றார்.

- அமெரிக்க பார்லிமென்ட் தேர்தலில், சென்னையை பூர்வீகமாக உடைய, கமலா ஹாரிஸ், ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார்; அமெரிக்க செனட் சபைக்குள், இந்தியர் ஒருவர் நுழைவது, இது முதன் முறை; இதன் மூலம், கமலா, வரலாற்று வெற்றி பெற்றுள்ளார். கலிபோர்னியா மாகாண அட்டர்னி ஜெனரலாக இருந்த கமலா ஹாரிஸ், பல ஆண்டுகளாகவே, ஜனநாயக கட்சியில் தீவிரமாக பணியாற்றி வருபவர். அவரது தாயார் சியாமளா கோபாலன்; சென்னையில் புற்றுநோய் மருத்துவராக இருந்த அவர், அமெரிக்காவில் குடியேறினார்; கமலாவின் தந்தை அமெரிக்காவை ஒட்டியுள்ள ஜமைக்கா நாட்டை சேர்ந்தவர்.

18] மத்திய சுகாதார அமைச்சகத்தால் 'செஹத் (உடல் நலம்)' என்ற பெயரில் டெலிமெடிசின் வசதி, கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம்

தொடங்கப்பட்டது. அப்போலோ மருத்துவமனை மருத்துவர்களிடம் ஆலோசனை பெறும் வகையில் மத்திய தொலைத்தொடர்பு அமைச்சகத்தின் உதவியுடன் இத்திட்டம் தொடங்கப்பட்டது.

- கேரளாவில் சபரிமலை, உத்தரா கண்டில் அமர்நாத், கேதார்நாத், குஜராத்தில் துவாரகா, ஒடிஷாவில் ஜெகந்நாத்புரி, தமிழகத்தில் ராமேசுவரம் என இந்துக்களின் புனிதத் தலங்களில் இந்த வசதி தொடங்கப்பட்டுள்ளது.

- இந்நிலையில் தற்போது, உ.பி.யின் வாரணாசியில் உள்ள காசி விஸ்வநாதர் கோயில் மற்றும் அதன் அருகிலுள்ள மிர்சாபூர் விந்தியாச்சல் கோயில் ஆகிய இடங்களில் டெலிமெடிசின் வசதி செய்யப்பட உள்ளது.

19] செய்தி துளிகள்

●●●●●●●●

01) நவம்பர் 01 / 2016 முதல் தமிழகத்தில் உணவு பாதுகாப்பு சட்டம் அமுலுக்கு வந்துள்ளது.

02) நவம்பர் 01 / 1956 ல் உருவான சென்னை மாநிலம் ( பின்னாளில் தமிழ்நாடு ) தனது 60 ஆண்டுகள் நிறைவை எய்தியுள்ளது.

03) நவம்பர் - 07 பாரத சாரணர்கள் மற்றும் வழிகாட்டிகள் இயக்க நிறுவன தினம்.

04) சூரிய பகவானை வணங்கும் சாத் பூஜை வட இந்தியாவில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டுள்ளது.

05) தனியார் பள்ளிகளுக்கு நிலம் உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்புகளை நிர்ணயம் செய்ய மாநில அரசால் அமைக்கப்பட்ட நிபுணர் குழுவில்

கூடுதலாக 3 கல்வியாளர்களை நியமித்து உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

01) S.L. சிட்டி பாபு

02) S.S. ராஜகோபால்

03) லலிதா.

20] செய்தி துளிகள்

°°°°°°°°°°°°°°°°°°°°°°°

01) அகில இந்திய சிறந்த காதி நெசவாளர் விருது சின்னாளபட்டியை ( திண்டுக்கல்) சேர்ந்த ரெங்கசாமிக்கு வழங்கப்பட்டுள்ளது.

02) டெல்லி உயர்நீதிமன்றம் தனது பொன்விழா ஆண்டை கொண்டாடியுள்ளது.

03) ஜப்பானில் நடைபெற்ற Miss World போட்டியில் பிலிப்பைன்சின் கைலீ வெர்சோசா முதலிடம் பெற்றுள்ளார்.

* ஆஸ்திரேலியாவின் அலெக்சாண்ட்ரா 2வது இடமும், இந்தோனேசியாவின் பெலிசியா 3வது இடமும் பெற்றுள்ளனர்.

04) மத்திய மனிதவள அமைச்சகமும் லிங்க்டுஇன் [ Linked in ] சமூக வலைத்தளமும் இணைந்து தொழில்நுட்ப கல்லூரி மாணவர்களுக்கான வேலை வாய்ப்பை உருவாக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் இட்டுள்ளன.

05) 2017 பிப்ரவரி 14 காதலர் தினத்தன்று விசாகப்பட்டினம் கடற்கரையில் " பீச் லவ் உற்சவம் " நடத்த ஆந்திர அரசு முடிவு செய்துள்ளது.

21] செய்தி துளிகள்

•••••••••••••••••••••••••

01) தனது 36வது வயதில் எவரெஸ்டில் ஏறி சாதனை படைத்த ஜப்பானிய பெண் ஜுங்கோ தபாய் புற்றுநோய் பாதிப்பால் காலமானார்.

02) அக்டோபர் = 29 உலக பக்கவாத நோய் தினம்.

பிரபல கிரிக்கெட் வீரர் சுனில் கவாஸ்கர் பக்கவாத நோய் விழிப்புணர்வு தூதராக { Stroke Ambassador for India} நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

03) வரலாற்றிலேயே முதன் முறையாக சீனாவும் , சௌதி அரேபியாவும் இணைந்து Exploration - 2016 என்ற பெயரில் ராணுவ பயிற்சியில் ஈடுபட்டன.

04) தேசிய ஒருமைப்பாடு தினத்தன்று ( அக் 31 - Ekta Diwas ) நாடு முழுவதும் Run For Unity என்ற பெயரில் ஓட்டப்பந்தயம் நடைபெற்றுள்ளது.

05) சிங்கப்பூரில் நடைபெற்ற WTA - உலக பெண்கள் டென்னிஸ் சாம்பியன்சிப் போட்டியின் ஒற்றையர் இறுதிப் போட்டியில் , சுலோவக்கியாவின் டொமினிகா சிபுலகோவா , ஜெர்மனியின் ஏஜ்சலிக் கெர்பரை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

* இரட்டையர் பிரிவில் ரஷ்யாவின் மகரோவா & எலினா வெஸ்னினா ஜோடி மாடக்சான்டஸ் & லூசிசபரோவா இணையை தோற்கடித்து பட்டம் வென்றுள்ளது.

22] இந்தியா - ஜப்பான் நாடுகளுக்கு இடையே சிவில் அணுசக்தி ஒப்பந்தம் நவம்பர் 11ல் கையெழுத்தானது.

* இதன் மூலம், அணு ஆயுதப்பரவல் தடை ஒப்பந்தத்தில் (என்பிடி) கையெழுத்திடாமலேயே ஜப்பானுடன் அணுசக்தி ஒப்பந்தம் மேற்கொண்டுள்ள முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது.

* இதற்கு முன் ரஷ்யா, அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் இந்தியா சிவில் அணுசக்தி ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

23] பிரதமர் மோடி தனது ஜப்பான் பயணத்தின் போது, டோக்கியோவில் இருந்து ஜப்பானின் ஹியோகோ மாகாணத்தில் உள்ள கோபே நகரில் நடைபெற்ற தொழில்துறையினருடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக புல்லட் ரயிலில் சென்றார்.

- இந்த புல்லட் ரயிலானது ஜப்பானிலேயே அதிவேகமாக செல்லக்கூடிய ஷின்கான்சென் ரக ரயிலாகும். இது, மணிக்கு 240 கிமீ முதல் 320 கிமீ வேகம் வரை செல்லக்கூடியது.

24] நாட்டிலேயே முதல் முறையாக திரவ இயற்கை எரிவாயுவை (LNG - Liquified Natural Gas ) எரிபொருளாகக் கொண்டு இயங்கும் பேருந்து சேவை, கேரள மாநிலத்தில் நவம்பர் 08ல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- எல்என்ஜி எரிபொருள், 50 சதவீதத்துக்கும் குறைவாகவே கார்பனை வெளியேற்றுவதால், இது, பொது போக்குவரத்துக்குப் பயன்பாட்டுக்கு உகந்ததாகவும், தூய்மையானதாகவும், பாதுகாப்பானதாகவும் கருதப்படுகிறது.

25] இணைய காணொளி குழுமமான 'யூ ட்யூப்', நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் ஆவலாக உள்ள இன்றைய தலைமுறை இந்திய குழந்தைகளை கவரும் பொருட்டு, 'யூ டியூப் கிட்ஸ் ' என்னும் செயலியை அறிமுகம் செய்துள்ளது.

26] கேரள மாநிலத்தில் ஓடும் ரயிலில் சௌமியா என்ற இளம்பெண் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட வழக்கில் வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பில் உள்ள குறைபாடுகள் குறித்து, உச்ச நீதிமன்ற அழைப்பாணையின் பேரில், உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி மார்க்கண்டேய கட்ஜு, நவம்பர் 11ல் நேரில் ஆஜராகி விளக்கம் அளித்துள்ளார்.

- உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஒருவர் உச்ச நீதிமன்றத்தில் ஆஜராவது இதுவே முதல் முறை.

27] நவம்பர் -- 11 தேசிய கல்வி தினம் ( சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர் மவுலானா அபுல்கலாம் ஆசாத் பிறந்த தினம் )

- கூடுதல் தகவல் ---- தற்போது மணிப்பூரின் ஆளுநராக பதவி வகிக்கும் திருமதி. நஜ்மா ஹெப்துல்லா , மவுலானா அபுல்கலாம் ஆசாத்தின் பேத்தியாவார்.

28] அமெரிக்காவின் 45வது அதிபராக குடியரசு கட்சியின் வேட்பாளராக ( யானை சின்னம் ) போட்டியிட்ட டொடனால்ட் டிரம்ப் வெற்றி பெற்றுள்ளார்.

- இவரை எதிர்த்து போட்டியிட்டவர் -- ஜனநாயக கட்சியின் சார்பில் ( கழுதை சின்னம் ) ஹிலாரி கிளிண்டன்.
- மொத்தம் உள்ள 538 தேர்தல் சபை வாக்குகளில் டிரம்ப் 285 வாக்குகளும், ஹிலாரி 218 வாக்குகளும் பெற்றுள்ளனர்.
- மாகாணங்கள் அடிப்படையில் டிரம்ப் 29லும், ஹிலாரி 18லும் வெற்றி பெற்றுள்ளனர்.
- துணை அதிபராக தற்போது இண்டியானா மாகாண கவர்னராக பதவி வகித்து வரும் மைக் பென்ஸ் ( குடியரசு கட்சி ) தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

29] பார்வையற்றோருக்கான 2வது 20 ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டி , இந்தியாவில் 2017 ஜனவரி 28 முதல் பிப்ரவரி 12 வரை நடைபெறுகிறது.

- இந்த போட்டியின் நல்லெண்ண தூதராக ராகுல் டிராவிட் நியமிக்கப்பட்டுள்ளார்

30] கறுப்பு பணத்திற்கு எதிரான பொருளாதார துல்லிய தாக்குதல்

( Economic Surgical Strike Against The Block Money )

* நாட்டில் தற்போது புழக்கத்தில் உள்ள 500 மற்றும் 1,000 ரூபாய் நோட்டுகள் நவம்பர் 08 / 2016 நள்ளிரவு முதல் செல்லாது என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

- மக்கள் தங்களிடம் உள்ள நோட்டுகளை டிசம்பர் 30க்குள் வங்கியில் செலுத்தி புதிய ரூபாய் நோட்டுகளை பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவித்துள்ளார்.
- இந்த ஆண்டு டிசம்பர் 30-ஆம் தேதிக்குள் 500, 1,000 ரூபாய் நோட்டுகளை வங்கிகளில் டெபாசிட் செய்ய இயலாதவர்கள், ரிசர்வ் வங்கி அலுவலகங்களில் அடுத்த ஆண்டு மார்ச் 31-ஆம் தேதிக்குள் அவற்றை டெபாசிட் செய்து கொள்ளலாம்.

கூடுதல் தகவல்கள்

----------------------------------

- இதே போன்று நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பு கடந்த 1946-ஆம் ஆண்டில் அப்போது புழக்கத்தில் இருந்த 1,000 , 5,000, 10,000 நோட்டுகள் செல்லாதவையாக அறிவிக்கப்பட்டன.
- 1954ம் ஆண்டில் மீண்டும் 1,000 , 5,000 , 10,000 நோட்டுகள் புழக்கத்தில் விடப்பட்டன.
- அதன் பின்பு மீண்டும் 1978 ஜனவரி 16ல் 1,000 , 5,000 , 10,000 நோட்டுகள் செல்லாதவை என அறிவிக்கப்பட்டன. அப்போது ஜனதா கட்சியின் சார்பில் மொரார்ஜி தேசாய் பிரதமராக பதவி வகித்து வந்தார். நிதியமைச்சராக Hirubhai Mulljibhai Patel மற்றும் RBI கவர்னராக I.G. Patel ஆகியோர் பதவி வகித்தனர்.
- ரூ.500 நோட்டு, கடந்த 1987-ஆம் ஆண்டில் புழக்கத்துக்கு வந்தது. கடந்த 2000-ஆம் ஆண்டு நவம்பரில் 1000 ரூபாய் நோட்டு மீண்டும் அறிமுகம் செய்யப்பட்டது.
- நரேந்திர மோடி தலைமையில் பாஜக கூட்டணி ஆட்சி அமைந்த பிறகு, கருப்புப் பண விவகாரத்துக்காக உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி எம்.பி.ஷா தலைமையில் சிறப்புப் புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

31] The Lobbyists : Untold Story of Oil Gas and Energy Sector

* எழுதியவர் -- ரஜீவ் ஜெய்ஸ்வால்

32] செய்தி துளிகள்

==============

01) கோவா மாநிலத்தின் முதல் பெண் முதல்வரான சசிகலா காகோட்கர், உடல்நலக் குறைவு காரணமாக அக்டோபர் 28ல் காலமானார்.

02) இந்தியாவில் முதன் முறையாக ஏடிஎம் இயந்திரம் மூலம் தங்க நாணயங்கள் பெறும் வசதி தலைநகர் தில்லி மற்றும் பெங்களூருவில் தொடங்கப்பட்டுள்ளது.

* இந்த முயற்சியில் ஆன்லைன் மூலம் நகை விற்பனை செய்து வரும் புளூஸ்டோன் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.
* இந்த ஏடிஎம் இயந்திரத்தின் மூலம் ஒன்று, இரண்டு, ஐந்து, பத்து மற்றும் 20 கிராம் வரையிலான 24 காரட் தங்க நாணயங்களை மார்கெட் விலை நிலவரத்திற்கே வாங்க முடியும்.

03) இந்த ஆண்டு வழக்கத்தைவிட 34% குறைவாகவே தென்மேற்குப் பருவ மழை பெய்துள்ளதால் கேரளா மாநிலம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

33] An Era of Darkness : The British Empire in India

* எழுதியவர் - சசி தரூர் ( காங்கிரஸ் M.P. )

34] செய்தி துளிகள்

==============

01) தாய்லாந்து மன்னர் பூமிபால அதுல்யதேஜ் காலமானதைத் தொடர்ந்து, மன்னரின் கடமைகளைத் தொடர்ந்து நிறைவேற்ற அரசப் பிரதிநிதியாக (ரீஜன்ட்) அந்நாட்டின் முன்னாள் பிரதமரும், அரசரின் உயர்நிலை ஆலோசனைக் குழுவான பிரிவின் கவுன்சில் தலைவராக பதவி வகித்து வரும் பிரேம் தின்சுலாநந்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

02) ரிசர்வ் வங்கியின் புதிய செயல் இயக்குநராக எம்.ராஜேஷ்வர் ராவ் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை செயல் இயக்குநராக பதவி வகித்து வந்த ஜி.மகாலிங்கம் விருப்ப ஓய்வு பெற்றார்.

03) அக்டோபர் 28 - சர்வதேச அனிமேஷன் தினம்

04) அக்டோபர் 29 - சர்வதேச இணைய தினம்

05) மத்திய நேரடி வரிகள் வாரிய (CBDT) தலைவராக பணியாற்றிவந்த ராணி சிங் நாயர் ஓய்வு பெற்றதை தொடர்ந்து புதிய தலைவராக சுஷீல் சந்திரா பொறுப்பேற்றுள்ளார்.

06) தேசிய அளவில் தங்கப் பத்திர விற்பனையில் தமிழ்நாடு அஞ்சல் வட்டம் முதலிடம் பெற்றுள்ளது.

07) பிரதமரின் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஜம்முவில் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனத்தைத் (ஐஐஎம்) தொடங்க மத்திய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

08) எம்.பி.க்கள் உறுப்பினர்களாக உள்ள " கான்ஸ்டிடியூஷன் கிளப் " , தகவல் அறியும் உரிமைச் சட்ட வரம்புக்குள் வரும் என்று மத்திய தகவல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

35] தீபாவளியைக் கொண்டாடும் விதமாக, நியூயார்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகக் கட்டடத்தின் மீது தீப விளக்குடன் " HAPPY DIWALI " என்ற ஆங்கில வார்த்தைகள் ஒளியாக விழுமாறு அலங்காரம் செய்யப்பட்டு இருந்தது.

36] நேபாள் சுற்றுப்பயணம் சென்ற ஜனாதிபதி பிரணாப்முகர்ஜிக்கு, காத்மாண்டு பல்கலைக்கழகம் கவுரவ டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது.

37] சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய மகளிர் சாம்பியன்ஸ் டிராபி ஹாக்கிப் போட்டியில், சீனாவைத் தோற்கடித்து இந்திய அணி மகளிர் அணி முதல்முறையாக சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.

38] செய்தி துளிகள்
===============

01) துபாய் விமான நிலையத்தில், முதன்முறையாக தமிழில் அறிவிப்பு வெளியிடும் முறை தொடங்கப்பட்டுள்ளது.

02) விண்வெளியில் தங்கி ஆய்வுப் பணியில் ஈடுபட்டு வரும் அமெரிக்க விண்வெளி வீரர்கள் ஷானே கிம்ப்ராஹ் மற்றும் ரூபின்ஸ் ஆகியோர் அங்கிருந்தே அமெரிக்க அதிபர் தேர்தலில் தங்களது வாக்குகளை செலுத்தியுள்ளனர்.

03) வட அமெரிக்க நாடான நிகராகுவாவில் டேனியல் ஓர்டேகா மூன்றாவது முறையாக அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது மனைவி ரொஸாரியோ முரில்யோ, துணை அதிபர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

04) சீனாவின் ஜியான் நகரத்தில் நடைபெற்ற 8-ஆவது சான்டா உலகக் கோப்பை போட்டியில், சீன தற்காப்புக் கலையான ஊஷுவில் இந்தியாவுக்கு 2 வெள்ளி, 3 வெண்கலம் என மொத்தம் 5 பதக்கங்கள் கிடைத்துள்ளன.

05) பாரீஸில் நடைபெற்ற பாரீஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் பிரிட்டன் வீரர் ஆன்டி முர்ரே, அமெரிக்காவின் ஜான் இஸ்னரை தோற்கடித்து பட்டம் வென்றார்.

06) 18 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது இந்திய குடியரசுத் தலைவர் ஒருவர், நேபாளத்துக்குப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

07) கடந்த 2014-ம் ஆண்டு நவம்பர் மாதம் சிட்னியில் நடந்த முதல் தர கிரிக்கெட் போட்டி ஒன்றில் விளையாடும் பொழுது, சக வீரர் சீன் அபோட் வீசிய பவுன்சர் பந்து தலையில் தாக்கி இறந்த ஆஸி ., வீரர் ஹியூக்ஸ் குடும்பத்துக்கு ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் ரூ.20 கோடியை நிவாரணமாக வழங்கியுள்ளது.

08) பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வற்கான பாரீஸ் ஒப்பந்தம், சர்வதேச சட்டமாக நவம்பர் 04ல் அமலுக்கு வந்துள்ளது.

39] ஐ.நா. சபையின் நிதிநிலையை நிர்வகித்தல், நிதி ஆதாரத்தைப் பெருக்குதல், பொருளாதாரம் தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல் தொடர்பான ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக இந்தியாவைச் சேர்ந்த மகேஷ் குமார் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- இந்திய வெளியுறவுப் பணி (ஐ.எஃப்.எஸ்.) அதிகாரியான மகேஷ் குமார், ஐ.நாவுக்கான இந்திய நிரந்தரத் தூதரகத்தில் முதன்மைச் செயலராக பதவி வகிப்பவர். முன்னதாக, பெல்ஜியம், இஸ்ரேல், பாலஸ்தீனம் ஆகிய நாடுகளில் இந்தியத் தூதரக அதிகாரியாக பணிபுரிந்துள்ளார்.
- மகேஷ் குமாருடன், ஜப்பான் நாட்டின் தகேஷி அகமாட்ஸி, சீனாவின் யே ஸிய்னாங் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

- சுவிட்சர்லாந்து நாட்டின் தலைநகரான ஜெனிவாவை தலைமையிடமாக கொண்டு செயல்படும் ஐக்கியநாடுகள் சபையின் சர்வதேச சட்ட கமிஷனின் புதிய உறுப்பினராக (ஆசிய-பசிபிக் பிராந்தியத்திற்கான) இந்தியாவைச் சேர்ந்த அனிருத்தா ராஜ்புத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவர் ஜனவரி 2017 முதல் 5 ஆண்டுகள் அந்த பதவியில் இருப்பார்.

40] தேசப் பிதா மகாத்மா காந்தியின் பேரன் கனு காந்தி உடல்நலக் குறைவால் காலமானார்.

- நாசா விண்வெளி ஆய்வு மையத்தின் விஞ்ஞானியாகப் பணியாற்றியவர் கனு காந்தி.
- விடுதலை வேள்வியின் மைல்கல்லாகக் கருதப்படும் " தண்டி யாத்திரை " போராட்டத்தின்போது மகாத்மாவின் கைத்தடியைப் பிடித்து அழைத்துச் சென்றவர்.

41] தமிழக அரசில் பணியாற்றும் பெண் ஊழியர்களுக்கான ஊதியத்துடன் கூடிய பிரசவ கால விடுப்பை 180 நாட்களில் இருந்து 270 நாட்களாக உயர்த்தி தமிழக அரசு நவம்பர் 07 / 2016ல் உத்தரவு பிறப்பித்துள்ளது.

- இந்த சலுகை இரண்டு குழந்தைகள் வரை மட்டுமே பொருந்தும்.

42] சென்னை மாகாணத்திலிருந்து பிரிந்து கேரள மாநிலம் உருவானதன் 60ம் ஆண்டு கொண்டாட்டம் நவம்பர் 01ல் ‘வஜ்ர கேரளம்’ என்கிற பெயரில் நடைபெற்றுள்ளது.

43] Military Exercises:-

01) யுத் அபியாஸ் === இந்தியா - அமெரிக்கா, நடைபெற்ற இடம்: (சௌபாட்டியா ராணுவ தளம்) உத்தரகாண்ட்

02) Red Flag === இந்தியா - அமெரிக்கா மற்றும் பல நாடுகளின் விமானப்படைகள் , நடைபெற்ற இடம்: அலாஸ்கா

03) Exercise COPE === இந்தியா - அமெரிக்கா விமானப்படை

04) Desert Eagle II === இந்தியா - ஐக்கிய அரபு எமிரேட்ஸ்(UAE), நடைபெற்ற இடம்: UAE

05) Iron - Fist === இந்திய விமானப்படையின் தயார்நிலை பயிற்சி, நடைபெற்ற இடம்: பொக்ரான்

06) வருணா === இந்தியா - பிரான்ஸ் கடற்படைகள்

07) கருடா === இந்தியா - பிரான்ஸ் விமானப்படைகள்

08) அஜேயா வாரியர் === இந்தியா - பிரிட்டன் ராணுவங்கள்

09) கருடா சக்தி === இந்தியா - இந்தோனேசியா ராணுவங்கள்

10) இந்திரா தனுஷ் / ரெயின்போ === இந்தியா - பிரிட்டன் விமானப்படைகள்

11) கொங்கன் === இந்தியா - பிரிட்டன் கடற்படைகள்

12) Sino - Inida Cooperation === இந்தியா - சீனா பேரிடர் மீட்பு ஒத்திகை , நடைபெற்ற இடம் ; லடாக்

13) மித்ரா சக்தி === இந்தியா - இலங்கை , நடைபெறும் இடம்: அம்பிபுசா(இலங்கை)

14) Force Eighteen === இந்தியா - ஆசியன் நாடுகள், நடைபெற்ற இடம்: பூனே(மகாராஷ்டிரா)

15) SLINEX === இந்தியா - இலங்கை கடற்படைகள்

16) SIMBEX === இந்தியா - சிங்கப்பூர், நடைபெற்ற இடம்: விசாகப்பட்டினம்

17) மைத்ரி === இந்தியா - தாய்லாந்து, நடைபெற்ற இடம்: கிராபி(தாய்லாந்து)

18) இந்திரா === இந்தியா - ரஷ்யா , நடைபெற்ற இடம்:விலாஸ்டிவாஸ்டிக்(ரஷ்யா)

19) Ausidex === ஆஸ்திரேலியா - இந்தியா

20) Khanjar === இந்தியா - கிர்கிஸ்தான்

21) Prabal Dostyk === இந்தியா - கஜகஸ்தான்

22) Ekuverin === இந்தியா - மாலத்தீவு

23) Sahyog Kaigin === இந்தியா - ஜப்பான், நடைபெற்ற இடம்: சென்னை கடற்கரை

24) Cobra Gold === இந்தியா, தாய்லாந்து, இந்தோனேசியா, அமெரிக்கா, உள்ளிட்ட 35 நாடுகள்

25) IBSAMAR === இந்தியா, பிரேசில், தென் ஆப்பிரிக்கா, நடைபெற்ற இடம்: கோவா

26) LAMITYE === இந்தியா செஷல்ஸ், நடைபெற்ற இடம் : விக்டோரியா - செஷல்ஸ்

27) நசீம் அல்பாகர் === இந்தியா ஓமன், நடைபெற்ற இடம்: அரபிக்கடல்

28) மலபார் === இந்தியா , அமெரிக்கா , ஜப்பான் கடற்படைகள்

29) சூர்யா கிரண் === இந்தியா - நேபாள் தரைப்படைகள்

30) Nomadic Elephant === இந்தியா - மங்கோலியா

31) Hand in Hand === இந்தியா - சீனா தரைப்படைகள்

32) Eagle ( Shaheen ) - 5 === சீனா - பாகிஸ்தான்

33) Druzhba ( Friendship ) 2016 === பாகிஸ்தான் - ரஷ்யா

34) Joint Sea 2016 === சீனா - ரஷ்யா கடற்படைகள்

35) Coordinated Patrol (CORPAT) === இந்தியா - இந்தோனேசியா கடற்படைகள் கூட்டு ரோந்து பயிற்சி

36) Coordinated Patrol (CORPAT) === இந்தியா - தாய்லாந்து கடற்படைகள் கூட்டு ரோந்து பயிற்சி

44] BRICS மாநாடுகள்
================

( 30க்கும் மேற்பட்ட மாநாடுகள் நடைபெற்றுள்ளன )

01) 8வது BRICS மாநாடு - கோவா ( பனாஜி ) - அக்டோபர் 15 & 16
( 7வது ரஷ்யா - Ufa City 2015 ., 6வது பிரேசில் - Fortaleza 2014)

02) Brics Friendship Cities Conclave -- மும்பை - ஏப்ரல் 14 - 16

03) இரண்டாவது BRICS இளைஞர் மாநாடு -- கவுகாத்தி - ஜூலை 01- 03

04) 1st Meeting of Brics Working group on Energy saving and Energy efficiency -- விசாகப்பட்டினம் - ஜூலை 04 & 05

05) 2nd Anti Drug Working Group Meeting of Heads of Anti Nargotics Agencies of Brics Countries -- டெல்லி - ஜூலை 08

06) Brics Policy Planning Dialogue Meeting -- பாட்னா -- ஜூலை 25 & 26

07) 1st Bricks Employment Working Group Meeting - BEWG - ஹைதராபாத் -- ஜூலை

27 & 28

08) Brics Women Parlimenterian's Forum Meeting -- ஜெய்பூர் - ஆகஸ்ட் 20 & 21

09) 2nd Meeting of Ministers of Disaster Manangement (MDM ) of Brics countries -- உதய்பூர் -- ஆகஸ்ட் 23 & 24

10) The Conference on International Arbitration in BRICS: Challenges, Opportunities and Road ahead -- டெல்லி -- ஆகஸ்ட் 27

11) Brics Convention on Tourism -- கஜுராஹோ (ம.பி) -- செப்டம்பர் 01 & 02

12) 1st Brics Film Festival -- டெல்லி - செப்டம்பர் 02 - 06

13) 4th BRICS Wellness Workshop -- பெங்களூரு - செப்டம்பர் 10

14) BRICS AROGYA FAIR -- பெங்களூரு - செப்டம்பர் 10 - 14

15) Sixth Meeting of National Security Advisers of the BRICS Countries -- டெல்லி - செப்டம்பர் 14 &15

16) 3rd Brics Urbanization Forum Meet -- விசாகப்பட்டினம் - செப்டம்பர் 14 - 16

17) The Environment Ministers of Brics Countries Meet -- கோவா ( பனாஜி ) -- செப்டம்பர் 16

18) 6th BRICS Meeting on Agriculture and Agrarian Development -டெல்லி செப்டம்பர் 22

19) BRICS Labour & Employment Ministerial Meet -- டெல்லி - செப்டம்பர் 27 & 28

20) BRICS கல்வி அமைச்சர்கள் நான்காவது உச்சி மாநாடு -- டெல்லி - செப்டம்பர் 30 - அக்டோபர் 02

21) BRICS முதலாவது வணிக கண்காட்சி -- டெல்லி - அக்டோபர் 12 - 14

45] 01) இந்திய அரசின் மலிவுவிலை விமான சேவைக் கட்டணத் திட்டம்? === உடான் திட்டம் (UDAAN யோஜனா)

02) நலந்தானா திட்டம் தொடங்கிய இந்திய அரசு நிறுவனம்? === பி.எஸ்.என்.எல்

03) உலக பட்டினிக்குறியீடு இந்தியாவின் இடம்? === 97

04) MOP 28 எனப்படும் உலகலாவிய பசுமைக் குடில் வாயு உமிழ்வைக் கட்டுப்படுத்தும் வரலாற்று சிறப்புமிக்க உடன்படிக்கை நடைபெற்ற இடம்? === கிகாலி(ருவாண்டா நாடு)

05) TERI அமைப்பு வழங்கும் நிலைத்த நீடித்த மேம்பாட்டுத் தலைமை விருது 2016 பெற்றவர்? === சிக்கிம் முதல்வர் பவன் சாம்லிங்

06) மேன் புக்கர் விருது 2016 பெற்றவர்? === Paul Beatty

07) மத நல்லிணக்க விருது பெற்ற திருவண்ணாமலை மாவட்ட பஞ்சாயத்து எது? === தச்சம்பட்டு

46] 01) சாரிகா புயல் தாக்கிய இடம்? === பிலிப்பைன்ஸ், வியட்நாம், சீனா

02) எய்ட் புயல் தாக்கிய இடம்? ==== வட கரோலினா

03) ஹெர்மைன் புயல் தாக்கிய இடம்? ==== கியூபா

04) ஜூலியா புயல் தாக்கிய இடம்? ==== தென் கிழக்கு அமெரிக்கா

05) கார்ல் புயல் தாக்கிய இடம்? ==== கேப் வேர்டே, பெர்முடா

06) மேத்யூ புயல் தாக்கிய இடம்? ==== ஹைதி

07) நிக்கோல் புயல் தாக்கிய இடம்? ==== பெர்முடா

08) காம்பசு புயல் தாக்கிய இடம்? ==== ஜப்பான், ரஷ்யா

09) நாம்தென்யுன் புயல் தாக்கிய இடம்? === ஜப்பான்

10) மாலௌ புயல் தாக்கிய இடம்? ==== ஜப்பான்

11) மெரண்டி புயல் தாக்கிய இடம்? ==== பிலிப்பைன்ஸ், தைவான் சீனா, மரியானா தீவு

12) ராய் புயல் தாக்கிய இடம்? ==== வியட்நாம், கம்போடியா, லாவோஸ், தாய்லாந்து

13) மலாக்காஸ் புயல் (ஜுனா புயல் ) தாக்கிய இடம்? === ஜப்பான், தைவான் மற்றும் மரியானா தீவுகள்

14) மேகி புயல் ( ஹெலன் புயல் ) தாக்கிய இடம்? ==== சீனா, தைவான், கரோலின்

15) சாங்டா புயல் தாக்கிய இடம்? ==== தென்கொரியா

16) ஏயியாரி(ஜுலியன்) புயல் தாக்கிய இடம்? ==== பிலிப்பைன்ஸ், தைவான், வியட்நாம்

17) ஹைமா புயல்(லாவின் புயல்) தாக்கிய இடம்? === பிலிப்பைன்ஸ் மற்றும் தென் சீனா

18) சாரிகா புயல் தாக்கிய இடம்? === பிலிப்பைன்ஸ், வியட்நாம், சீனா

47] 01) WHO சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட South - East Asia Regional Health Emergency Fund (SEARHEF) மாநாடு கொழும்புவில், செப்டம்பர் 05 முதல் 09வரை நடைபெற்றுள்ளது.

02) SAARC Terrorist Offences Monitoring Desk (STOMD) & SAARC Drug Offences Monitoring Desk (SDOMD) என்னும் மாநாடு டெல்லியில் செப்டம்பர் 22 மற்றும் 23ல் நடைபெற்றுள்ளது.

03) சார்க் நாடுகளின் குடியுரிமைத்துறை அதிகாரிகள் ( IMMIGRATION AUTHORITIES ) 7வது மாநாடு , இஸ்லாமாபாத்தில் ஆகஸ்ட் 03ல் நடைபெற்று முடிந்துள்ளது.

04) சார்க் நாடுகளின் உள்துறை அமைச்சர்களின் 7வது மாநாடு , இஸ்லாமாபாத்தில் ஆகஸ்ட் 03 மற்றும் 04ல் நடைபெற்று முடிந்துள்ளது.

05) சார்க் நாடுகளின் நிதி அமைச்சர்களின் மாநாடு , இஸ்லாமாபாத்தில் ஆகஸ்ட் 25 மற்றும் 26ல் நடைபெற்று முடிந்துள்ளது. இம்மாநாட்டில் நிதியமைச்சர் அருண் ஜேட்லிக்கு பதிலாக, பொருளாதார விவகாரங்களுக்கான செயலளர் சக்தி காந்த தாஸ் கலந்து கொண்டுள்ளார்.

06) சார்க் நாடுகளின் இளம் பாராளுமன்ற உறுப்பினர்களின் முதல் மாநாடு ஆகஸ்ட் 16 முதல் 18வரை இஸ்லாமாபாத்தில் நடைபெற்று முடிந்துள்ளது. THEME --- PEACE AND HORMONY FOR DEVELOPMENT

07) சார்க் நாடுகளின் புள்ளியியல் அமைப்புகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் 8வது மாநாடு { Heads of SAARC Statistical Organizations (SAARCSTAT) } புதுடெல்லியில் ஆகஸ்ட் 29 முதல் 31வரை நடைபெற்று முடிந்துள்ளது. THEME --- Trade Statistics - Merchandise & Services

08) அமைச்சர்கள் அளவிலான 4வது South Asia Initiative to End Violence Against Children (SAIEVAC) மாநாடு புதுடெல்லியில் மே 09 முதல் 11வரை நடைபெற்று முடிந்துள்ளது.

09) சார்க் நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களின் 37வது மாநாடு நேபாளில் மே 17ல் நடைபெற்றுள்ளது.

10) சார்க் நாடுகளின் பாதுகாப்பு துறை அதிகாரிகள் மாநாடு செப்டம்பர் 29 மற்றும் 30ல் புதுடெல்லியில் நடைபெற்றுள்ளது. இம்மாநாட்டில் பாகிஸ்தான் சார்பில் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை.

11) சார்க் நாடுகள் சார்பிலான 3வது சூபி திருவிழா அக்டோபர் 14 முதல் 16வரை ஜெய்ப்பூரில் நடைபெற்றுள்ளது. இம்மாநாட்டில் பாகிஸ்தான் சார்பில் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை.

12) 19வது சார்க் மாநாடு, நவம்பர் 09 மற்றும் 10ல் இஸ்லாமாபாத்தில் நடைபெற இருந்தது. இதனை இந்தியா புறக்கணிப்பதாக அறிவித்ததை தொடர்ந்து, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் , நேபாள் , இலங்கை, பூடான் ஆகிய நாடுகளும் புறக்கணிப்பதாக அறிவித்ததால், சார்க் மாநாடு ரத்து செய்யப்பட்டுள்ளது.

48] விவசாய விளைபொருட்கள் சந்தையிடல், நில குத்தகை, தனியார் காடுகள் ஆகிய 3 துறைகளில் சீர்திருத்தங்களை புகுத்தி, விவசாய வர்த்தகம் செய்ய ஏற்ற மாநிலங்களாக திகழ்கிற மாநிலங்களை நிதி ஆயோக் அமைப்பு வரிசைப்படுத்தி பட்டியலிட்டுள்ளது.

- மராட்டிய மாநிலம், 100-க்கு 81.7 புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்துள்ளது.
- முதல் 10 இடங்களை முறையே மராட்டியம், குஜராத், ராஜஸ்தான், மத்திய பிரதேசம், அரியானா, இமாசல பிரதேசம், ஆந்திரா, கர்நாடகம், தெலுங்கானா, கோவா ஆகிய மாநிலங்கள் பிடித்துள்ளன.
- தமிழகம் 17.7 புள்ளிகளுடன் 25-வது இடத்தில் உள்ளது.
- இந்த பட்டியலில் கடைசி இடத்திற்கு புதுச்சேரி தள்ளப்பட்டிருக்கிறது. புதுச்சேரி பெற்றுள்ள புள்ளிகள் 4.8
- பீகார், கேரளா உள்ளிட்ட 3 மாநிலங்களிலும், 4 யூனியன் பிரதேசங்களிலும் விவசாய விளை பொருட்கள் சந்தையிடல் குழு சட்டம் இல்லாததால் அவை இந்த பட்டியலில் இடம் பெறவில்லை.

49] நாட்டின் பருப்பு விளைச்சலை அதிகரிக்க புதிய வீரிய ரக பருப்பு விதைகளை இந்திய வேளாண் ஆய்வு மையம் உருவாக்கியுள்ளது.

- புதிதாக உருவாக்கப்பட்ட வீரிய ரக பருப்புக்கு பூசா 16 என பெயரிடப்பட்டுள்ளது.
- புதிய பருப்பு ரகமானது நான்கு மாதங்களில் அறுவடை செய்யக் கூடியதாகும். வழக்கமான பருப்பு வகைகள் 6 முதல் 9 மாதங்கள் வரை காலம் எடுத்துக் கொள்ளும்.

50] சிறு முதலீட்டாளர்களை பாதுகாக்கும் விஷயத்தில் நியூஸிலாந்து மற்றும் சிங்கப்பூர் நாடுகள் முதலிடங்களில் உள்ளன.

- இதற்கடுத்து ஹாங்காங், மலேசியா, கஜகஸ்தான், இங்கிலாந்து, கனடா, நார்வே, சவுதி அரேபியா, ஸ்லோவேனியா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் உள்ளன.
- இந்தியா 13-வது இடத்தில் உள்ளது.
- { உலக வங்கி வெளியிட்ட தொழில் புரிவதற்கான சாதகமான நாடுகள் தர வரிசை பட்டியல் 130வது இடத்தில் உள்ளது. }

51] பொருளாதார சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தும் மாநிலங்களின் மதிப்பீடு - 2016

* உலக வங்கியும், மத்திய அரசின் தொழில்துறைக் கொள்கை மற்றும் மேம்பாட்டு துறையும் இணைந்து தயாரித்துள்ள , இந்தியாவில் தொழில்புரிய சிறந்த சூழல் நிலவும் மாநிலங்களின் பட்டியலில் ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலங்கானா மாநிலங்கள் முதலிரண்டு இடங்களில் உள்ளன.

* குஜராத், சத்தீஸ்கர், மத்திய பிரதேசம், ஹரியாணா மாநிலங்கள் முறையே 3,4,5 மற்றும் 6வது இடங்களில் உள்ளன.

* ஜார்கண்ட் 7வது இடத்திலும், ராஜஸ்தான் 8-வது இடத்திலும், உத்தராகண்ட் 9-வது இடத்திலும், மஹாராஷ்டிரா 10-வது இடத்திலும் உள்ளன.

* இந்த பட்டியலில் தமிழ்நாடு 18வது இடத்தில் உள்ளது.

* சமீபத்தில் உலக வங்கி வெளி யிட்ட தொழில் புரிவதற்கான சூழல் நிலவும் நாடுகள் வரிசையில் இந்தியா 130 வது இடத்தில் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு 131 வது இடத்தில் இந்தியா இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

52] திரைப்பட பின்னணி பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்துக்கு இந்த ஆண்டின் இந்திய திரை ஆளுமைக்கான நூற்றாண்டு விருதை மத்திய அரசு அறிவித்துள்ளது.

- கோவாவில் வரும் 20-ம் தேதி தொடங்கி 28-ம் தேதி வரை நடைபெறும் 47-வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் அவருக்கு இந்த கவுரவம் அளிக்கப்படுகிறது.
- இவர் சிறந்த பின்னணி பாடகருக்கான தேசிய விருதை 6 முறை பெற்றுள்ளார். அதிக பாடல்களை பாடியவர் என்ற கின்னஸ் சாதனைக்கும் சொந்தக்காரர் ஆவார்.

53] இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களில் முக்கியமானவரும், சுதந்திர இந்தியாவின் முதல் துணைப் பிரதமருமான சர்தார் வல்லபாய் படேன் 141-வது பிறந்த நாளை ( அக்டோபர் 31) முன்னிட்டு பிரதமர் மோடி ரூ.10 மதிப்பிலான, படேல் நினைவு தபால்தலையை வெளியிட்டுள்ளார்.

54] 01) காகிதப் பணப்புழக்கத்தைக் குறைத்து மின்னணு பணப் பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் மைய வங்கியின் தொழில்நுட்பம்? ==== Block chain

02) முழுவது குளிரூட்டப்பட்ட ரயில் சேவை? ==== ஹம்சபார் விரைவு ரயில்

03) ரைட் லைவ்லீ விருது பெற்ற நஸ்ரா என்ற அமைப்பினைத் தொடங்கியவர்? === மெர்சன் ஹசான் ( எகிப்து )

04) 1854 நவம்பர் 5 அன்று ஜப்பானில் நடைபெற்ற Inamora No Hi எனப்படும் "அரிசிப்பொதிகளை எரித்தல்" நினைவு கூறும் விதமாக இந்த நாளை எந்த நாளாக கொண்டாடப்படும் என ஐ.நா அறிவித்தது? === முதல் சுனாமி எச்சரிக்கை நாள்

05) மதுரை சண்முகவடிவு சுப்புலட்சுமியின் எவ்வளவு டாலர் மதிப்பிலான அஞ்சல் தலையை ஐ.நா. தபால் துறை வெளியிட்டது? ==== 1.20 us doller

06) ஐ.நா பொதுச்சபையில் இன்னிசைக் கச்சேரி நிகழ்த்திய இரண்டாவது இந்தியர்? === A.R.ரகுமான்

07) ஸ்வச் பாரத் வாரம்? === செப் 27 - அக் 02

08) உலக விண்வெளி வாரம்? ==== அக் 04 - 10

09) முதலாம் ஜெஸ்சி ஓவன்ஸ் ஒலிம்பிக் ஊக்க விருது 2016 யாருக்கு அளிக்கப்பட்டது? === முகமது அலி

10) தமிழ்நாடு வனத்துறையினர் தியாகிகள் தினம்? === செப் 11

11) ராஷ்ட்ரிய கேல் புரோட்சஹானா புரஸ்கர் விருது 2016 பெற்ற அமைப்பு? === RBI

12) 2016 ஆம் ஆண்டிற்கான துரோணாச்சாரியார் விருது மற்றும் தியான் சந்த் விருதிற்கான வீரர்களை தேர்வு செய்த தேர்வுக்குழுவின் தலைவர்? ==== மேரிகேம்

13) 2016 ஆம் ஆண்டிற்கான ராஜீவ்காந்தி கேல் ரத்னா விருது மற்றும் அர்ஜுன் விருதிற்கான வீரர்களை தேர்வு செய்த தேர்வுக்குழுவின் தலைவர்? ==== அகர்வால்

14) ஆசியாவின் முதல் அரிசி தொழில்நுட்ப பூங்கா அமையவுள்ள இடம்? === கங்காவதி ( கர்நாடகா )

15) ஒரு நாளில் ஒரு மசோதா எதனுடன் தொடர்புடையது? === பூசா ராஜேந்திர பிரசாத் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தை மத்தியப் பல்கலைக் கழகமாக தரம் உயர்த்தும் மசோதா

16) இந்தியாவின் முதல் நீர்ச்சுற்றுலா எங்கு நடைபெற்றது? ==== மத்தியப்பிரதேசம் - இந்திரா சாகர் அணையில்

17) சர்வதேச பட்டம் விடும் விழா இந்தியாவில் எங்கு நடைபெறுகிறது? ==== சூரத் மற்றும் ராஜ்கோட் பகுதிகளில்

18) சத்தீஸ்கர் மாநிலத்தில் மாவோயிஸ்டுகளை ஒடுக்கும் நடவடிக்கை? ==== operation green hunt

19) இந்தியாவில் லேசர் தொழில்நுட்பச் சுவர் எங்கு அமையவிருக்கிறது? ==== பஞ்சாப் ( இந்தியா - பாகிஸ்தான் எல்லை)

20) விதிகளுக்கு புறம்பாகக் கட்டப்பட்டுள்ள இந்தியாவின் மிக உயர்ந்த கட்டடம் என அழைக்கப்படுவது? ==== போலாரிஸ் ராயலோ

21) உலகின் முதல் மிதக்கும் அணுமின் நிலையம் அமைக்கவுள்ள நாடு? ==== சீனா

22) இந்தியாவின் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை இந்தியன் ஆயில் நிறுவனம் எங்கு ஏற்படுத்தியுள்ளது? ==== ஓடிஸா( பாரதீப் துறைமுகத்தில் நிறுவப்பட்டுள்ளது)

23) வியத்தகு இந்தியாவின் தற்போதைய தூதர்? ==== அமிதாப்பச்சன் & ஐஸ்வர்யா

24) காட்மாத் போர்க்கப்பல் எங்கு தயாரிக்கப்பட்டது? ==== விசாகப்பட்டினம்

25) காமோவ் ஹெலிகாப்டர் தயாரிக்க இந்தியா எந்த நாட்டுடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது? ==== ரஷ்யா

26) இந்தியா எந்த நாட்டுடன் HSBT - 6 ஒப்பந்தம் மேற்கொண்டது? === அமெரிக்கா ( தீவிரவாதம் தொடர்பாக உளவுத்தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுதல் )

27) நேபாளத்தின் எந்த இடத்தில் இருந்து இந்தியாவிற்கு நேரடியாக பஸ் போக்குவரத்து வசதி தொடக்கம்? === போகாரா

28) லிபு லேக் மற்றும் நாதுல்லா கணவாய் வழியாக மானசரோவர் செல்ல, இந்தியா எந்த நாட்டுடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது? ==== சீனா

29) இந்தியா, திறன் மேம்பாட்டிற்கான ஆடை பயிற்சி மையம் எந்த நாட்டில் அமைக்கிறது? === நைஜீரியா

30) நாட்டிலேயே முதன்முறையாக நிதி சார்ந்த பிரச்சனைகளை விரைந்து விசாரித்து தீர்க்க சர்வதேச நடுவர் மன்றம் அமையவுள்ள இடம்? ==== மும்பை

31) தென்னிந்தியாவின் முதல் ரயில் சுரங்கப்பாதை எங்கு துவங்கப்பட்டுள்ளது? ==== பெங்களூரு

32) Talk to AK என்ற நேரடி உரையாடல் நிகழ்ச்சியை நடத்திய மாநில முதல்வர் ? ==== டெல்லி

33) உலகின் முதல் மின்னணு கழிவறை இந்தியாவில் அமையவுள்ள இடம்? ==== திருவனந்தபுரம் - கேரளா

34) woodpecker environment and wildlife film festival நடைபெறவுள்ள மாநிலம்? ==== சிம்லா

35) 2016-17 ஆண்டிற்கான சார்க் தலைநகரம்? ==== Mahasankar

36) கொலை செய்யப்பட்ட புலனாய்வு பத்திரிக்கையாளரான இவரது பெயர் மும்பை சதுக்கத்திற்கு சூட்டப்பட்டுள்ளது? ==== ஜோதிர்மாயி டே

37) யுனெஸ்கோ பாரம்பரிய பட்டியலில் இடம்பெற்றுள்ள இந்திய பல்கலைக்கழகம்? ==== நாளந்தா பீகார்

38) சென்னை சென்ட்ரல் ரயில்நிலையம் எந்த நிறுவனத்துடன் இணைந்து அதி நவீன வை-பை வசதி ஏற்படுத்தியுள்ளது? ==== கூகுள் நிறுவனம்

39) உலகின் அதிக செறிவு கொண்ட சூரிய மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ள மொராக்கோ நாட்டு நகரம்? === ஔசர்டே

40) திறன்மிகு கடல் மேலாண்மை விருது பெற்ற தமிழக துறைமுகம்? ==== வ.ஊ.சி துறைமுகம் , தூத்துக்குடி

41) ஆசியாவிலேயே மிகவும் தூய்மையான நகரம்? === மல்லிநோக் - மேகாலயா

42) உலகின் அதிக மாசுபட்ட நகரப் பட்டியலில் டெல்லியைப் பின்னுக்குத் தள்ளி முதலிடம் விகிப்பது? === ஈரானின் சாபோஸ் நகரம்

43) கங்கை நதியின் புலிகள் என அழைக்கப்படும் டால்பினை நகர விலங்காக அறிவித்துள்ள நகரம்? === கவுகாத்தி

44) நசாமுக் பாரத் அந்தோலன் என்ற மது போதைக்கு எதிரான தேசிய இயக்கம் தொடங்கியுள்ள மாநிலம்? === டெல்லி

45) Matdaata Mahotsa என்ற வாக்காளர் திருவிழா நடைபெற்ற இடம்? === டெல்லி , கன்னாட் பிளேஸ்

46) Habbitat திரைப்பட விழா 2016 நடைபெற்ற இடம்? === டெல்லி

47) ராஜஸ்வ கியான் சங்கம் எனப்படும் வருவாய் ஞானக் கருத்தரங்கம் நடைபெற்ற இடம்? === டெல்லி

48) மத்தியபிரதேசம் மாநிலம் பிதாம்பூர் SEZ யில் ராணுவப்பூங்கா மற்றும் விண்வெளிப்பூங்கா அமைக்க எந்த தனியார் குழுமம் அனுமதி பெற்றுள்ளது? === ரிலையன்ஸ் குழுமம்

49) இந்திய புவிக்கன்காணிப்பு செயற்கைகோள்களின் புகைப்படத் தரவுகளை கையாளும் மையம் அந்தமான், புருனே, பியாக் போன்ற இடங்களில் உள்ள நிலையில் புதிதாக அமையவுள்ள இடம்? === ஹோசிமின் - வியட்நாம்

50) எவரஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் தமிழர்? ==== சிவகுமார்

51) இந்தியாவின் முதல் மூன்றாம் பாலின காவல் உதவி ஆய்வாளர்? ==== ப்ரித்திகா யாஷினி

52) 21வது சட்ட ஆணையத்தின் தலைவர்? ==== B.S. சௌஹான்

53) சுசீலா கார்க்கி யார் ? ==== நேபாள் பெண் முதல் நீதிபதி

54) இந்தியா பாகிஸ்தான் போர் நிறுத்தக் கொட்டை கண்காணிக்கும் ஐ.நா தூதுக்குழுவின் புதிய தலைவர்? === கஷ்டாப் லோடின்

55) அண்டார்டிகாவின் மிக உயர்ந்த சிகரமான வின்சென் மேசிப் உச்சியை அடைந்து சாதனைப்படைத்த பெண்? === அபர்ணா குமார்

56) மகாராஷ்டிரா மாநிலம், ஷானி ஷிங்னாபூர் கோவில் கருவறையில் பெண்கள் நுழைய தடை விதித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து போராடும் பெண்? ==== திருபதி தேசாய்

57) பல்கேரியாவில் நடைபெற்ற உலக மண் சிற்பப்போட்டியில் தங்கம் வென்றவர்? === சுதர்சன் பட்நாயக்

58) ஸ்வயம் திட்டம் எதனுடன் தொடர்புடையது? ==== இணைய வழிக்கல்வி

59) ஜன் ஔஷதோசி திட்டம் எதனுடன் தொடர்புடையது? === மலிவு விலை மருந்துகள்

60) முதல் பிரெய்லி ரயில் வண்டி? === Mysore-waranasi

61) தற்போது பாரத் ஸ்டேஜ் எந்த நிலையிலிருந்து எந்த நிலைக்கு செல்லவுள்ளது? === 4 ------> 6

62) HAM திட்டம் எதனுடன் தொடர்புடையது? === தேசிய நெடுஞ்சாலைகள் அமைப்பது தொடர்பாக - Hybrid Antiquity Model

63) உள்நாட்டு சுற்றுலாப்பயணிகள் வருகையில் முதலிடம் வகிக்கும் மாநிலம்? === தமிழ்நாடு

64) இந்தியாவின் முதல் கடல் அருங்காட்சியகம் தமிழகத்தில் அமையவுள்ள இடம்? === மாமல்லபுரம்

65) இந்தியாவில் காற்றின் தரம் நன்று குறியீட்டில் முதலிடம் வகிக்கும் இடம்? === கோவை

66) மூன்று தேசிய விருதுகளைப் பெற்றதும், எம்.சந்திரகுமார் எழுதிய லாக்கப் என்ற நூலைத் தழுவி எடுக்கப்பட்ட திரைப்படம்? ==== விசாரணை

67) தமிழகத்தில் நடமாடும் நூலகம் அறிமுகம் செய்யப்படுள்ள இடம்? ==== தஞ்சை ( சரஸ்வதி மகால் சார்பாக )

68) தமிழகத்தில் சூரிய ஒளியினால் மின்சாரம் பெற்ற முதல் பழங்குடியின கிராமம்? === மூங்கில்பாளையம்

69) தொல்காப்பியர் சிலை நிறுவப்பட்டுள்ள இடம்? === காப்பியக்காடு, கன்னியாகுமரி

70) சென்னை மெட்ரோ ரயிலை இயக்கிய முதல் பெண் ஓட்டுனர்? === பிரீத்தி., ஜெயஸ்ரீ

71) MGNREGA திட்டத்திற்காக தேசிய விருது பெற்ற தமிழக மாவட்டம்? ==== திருவள்ளூர்

72) தமிழ்நாடு 10 & 12 ஆம் வகுப்புகளில் தேர்வு செய்யப்பட்ட சில பாடங்களை எளிதில் கற்றுக்கொள்ள முப்பரிமான தொழில்நுட்பத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள அலைபேசி செயலி? ==== Tnschoollive

73) டெல்லி பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ள மரபணு மாற்றம் செய்யப்பட்டுள்ள கடுகின் பெயர்? === DMH 11

74) புராஜெக்ட் லூன் முதன் முதலாக எங்கு தொடங்கப்பட்டுள்ளது? === இலங்கை

75) உள்நாட்டிலேயே தயாரான முதல் அணுசக்தி நீர்மூழ்கிக்கப்பல்? ==== அரிஹந்த்

76) சீனாவின் குவாங்க்சு நிறுவனம் உலகிலேயே மிகவும் லேசான உறுதிவாய்ந்த பொருளாக தயாரித்துள்ள காகிதம்? ==== graphene aerogel

77) ஐநா சபைக்கான இந்தியாவின் புதிய நிரந்தர தூதர்? === syed akbarutheen

78) சாஹஸ்தா சீமா பால்படையின் புதிய பெண்தலைவர்? === அர்ச்சனா ராமசுந்தரம்

79) அர்ஜென்டினாவில் உள்ள மிக உயர்ந்த சிகரமான அக்கென்காகு மலை மீது ஏறி சாதனை செய்துள்ள இந்தியர்? === அருணிமா சின்ஹா

80) கால்பந்தாட்ட சூறாவளி யார் ? ==== மெஸ்ஸி

81) தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகர்ப்புற திடக்கழிவு உர பயன்பாட்டை பிரபலப்படுத்தும் தூதராக நியமனம் செய்யப்படுள்ளவர்? ==== அமிதாப்

82) யுனெஸ்கோ அமைதிக்கான கலைஞராக நியமிக்கபட்டுள்ள துருக்கி இசைக்கலைஞர்? === குட்சி எர்குனர்

83) அமெரிக்காவின் ஜனாயக கட்சி வேட்பாளர்? குடியரசுக் கட்சி வேட்பாளர்? === ஜனாயக கட்சி / ஹிலாரி - கழுதைச் சின்னம் ., குடியரசுக் கட்சி / டொனால்டு டிரம்ப் -

84) ரியோ ஒலிம்பிக்கில் 100மீ ஓட்டப்பந்தயப் போட்டியில் சுமார் 36 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா சார்பில் பங்கேற்றவர்? ==== டூட்டி சந்த்

85) European Materials Research Society 2016 ஆண்டு இளம் சாதனையாளர் விருது பெற்றவர்? === நந்தினி பந்துரு

86) BCCI யின் தலைவராக தேர்வு செய்யப்படுள்ள பிஜேபி மக்களவை உறுப்பினர்? === அனுராக்தாகூர்

87) முரளிபிள்ளை எதனுடன் தொடர்புடையவர்? === சிங்கப்பூர் பாராளுமன்ற இடைத்தேர்தலில் வெற்றிபெற்றவர்

88) ஐ சி சி கிரிக்கெட் குழுவின் தலைவராக இரண்டாவது முறை தேர்வு செய்யப்பட்டவர்? === அனில் கும்ப்ளே

89) அக்கைய் பத்மாஷாலி எதனுடன் தொடர்புடையவர்? === டாக்டர் பட்டம் பெற்ற முதல் மூன்றாம் பாலினத்தவர்

90) உடுப்பி ராமச்சந்திர ராவ் பெற்ற விருது? === சர்வதேச ஆஸ்ட்ரோ நாட்டிகல் அமைப்பின் ஹால் ஆப் பேம் விருது பெற்ற முதல் இந்தியர்

91) இலங்கையின் ரிசர்வ் வங்கியின் ஆளுனராரக நியமனம் செய்யப்பட்டுள்ளவர்? === இந்திரஜித் குமாரசாமி

92) இரும்புப் பெண்மணி என்று அழைக்கப்பட்ட மார்க்கரெட் தாட்சர் இங்கிலாந்தின் முதல் பெண் பிரதமர் தேர்வான நிலையில், தற்போதைய பெண் பிரதமர்? === தெரசா மே

93) USA டெக்சாஸ் மாகாண சிறந்த தொடக்கப்பள்ளி ஆசிரியர் விருது 2016 பெற்றவர்? === ரேவதி பாலகிருஷ்ணன்

55] மித்ரா சக்தி - 2016

இந்தியா, இலங்கை ராணுவங்கள் இணைந்து மேற்கொள்ளும் ராணுவ பயிற்சி 6வது மித்ரா சக்தி - 2016 , அக்டோபர் 24 முதல் நவம்பர் 06 வரை இலங்கையில் நடைபெறுகிறது.

56] ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் பிராட் ஹாக் , தனது சுயசரிதையை The Wrong Un என்ற பெயரில் புத்தகமாக எழுதியுள்ளார்.

57] 17 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கோப்பை கால்பந்து போட்டிகள் அடுத்த ஆண்டு அக்டோபர் 6-ம் தேதி முதல் 28-ம் தேதி வரை இந்தியாவில் உள்ள 6 நகரங்களில் நடைபெறும் என பிபா தெரிவித்துள்ளது.

- கொச்சி, நவி மும்பை, கோவா, டெல்லி, குவாஹாட்டி, கொல்கத்தா ஆகிய நகரங்கள் போட்டியை நடத்த தேர்வு செய்யப்பட்டுள்ளன.

58] இந்திய ரிசர்வ் வங்கி அறிவிப்பு

புதிய 2000 ரூபாய் நோட்டு
ooooooooooooooooooooooooooooooooooo

அளவு -- 66 மி.மீ × 166 மி.மீ
நிறம் -- மஜந்தா
ஏழு சாய் கோண பிளீட் லைன்கள்
கருப்பொருள் ( Theme) -- நாடு முதல் முறையாக வேற்று கிரகத்திற்கு விண்கலம் அனுப்பிய முயற்சி

புதிய 500 ரூபாய் நோட்டு
ooooooooooooooooooooooooooooooooooooo

அளவு -- 66 மி.மீ × 150 மி.மீ
நிறம். --- கல் சாம்பல்
ஐந்து பிளீட் லைன்கள்
கருப்பொருள் ( Theme ) -- இந்திய பாரம்பரிய சின்னமான செங்கோட்டை

59] 68 ஆண்டுகளுக்கு பிறகு சூப்பர் நிலாவை நவம்பர் 14 / 2016ல் பார்க்க வாய்ப்பு கிடைத்துள்ளது.

- பூமியைச் சுற்றி வரும் நிலா சுமார் 70 ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே பூமிக்கு மிக அருகில் தெரியும். வழக்கத்தைவிட நிலா சுமார் 14 சதவீதம் பெரிதாக நமது கண்களுக்கு தெரிகிறது.
- பூமியில் இருந்து 3.84 லட்சம் கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நிலா, அதன் நீள்வட்ட பாதையில் சுற்றி வருகிறது. 'சூப்பர் நிலவு' நிகழ்வு ஏற்படும்போது 48 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் நிலா பூமிக்கு அருகில் வந்து செல்லும். அதனாலேயே இந்த அதிசய நிகழ்வின்போது நிலா சற்று பெரியதாகவும், கூடுதல் ஒளியுடனும் காணப்படும் என்று கூறப்படுகிறது.
  ⁕ இதன் மூலம், அதாவது நிலவை அருகில் இருந்து பார்ப்பது போல தோன்றும். வழக்கமான ஒளியை விட 30 சதவீதம் கூடுதலான

ஒளியுடன் இன்று இந்த நிலவு தோன்றுவதால் இன்றைய இரவு மிகவும் வெளிச்சமாக இருக்கிறது.

- கடந்த 1948ம் ஆண்டு இதுபோன்ற நிகழ்வு வானில் தோன்றியது. அதற்கு பிறகு 68 வருடங்களுக்கு பிறகு இன்று இந்த பெரிய நிலா தோன்றியுள்ளது.

60] நாட்டின் தொழில் துறை, உற்பத்தித் துறை ஆகியவற்றின் சேவைகளை விளக்கும் வகையில், நவம்பர் 14 முதல் 27 வரை நடைபெறவுள்ள 36-ஆவது இந்திய சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை, தில்லியில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி துவக்கி வைத்துள்ளார்.

* இந்திய சர்வதேச வர்த்தகக் கண்காட்சி, " டிஜிட்டல் இந்தியா " என்ற கருத்தாக்கத்துடன் நடைபெறுகிறது.

* கண்காட்சியின் கூட்டாளி நாடாக தென் கொரியாவும், வர்த்தகத்தில் கவனம் செலுத்தும் நாடாக பெலாரஸும் அறிவிக்கப்பட்டுள்ளது.

* இதேபோல, கூட்டாளி மாநிலங்களாக மத்திய பிரதேசம், ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களும் கவனம் செலுத்தும் மாநிலமாக ஹரியாணாவும் இடம் பெற்றுள்ளன.

* இந்த கண்காட்சியில் " தமிழ்நாடு தினம் " நவம்பர் 18-இல் கொண்டாடப்படுகிறது.

61] தமிழ்நாடு மகளிர் ஆணையத்தின் முன்னாள் தலைவி டாக்டர். விசாலாட்சி நெடுஞ்செழியன் வயது மூப்பின் காரணமாக காலமானார்.

- இவரது கணவர் நாவலர் நெடுஞ்செழியன் , பேரறிஞர் அண்ணா , கருணாநிதி , எம்.ஜி.ஆர். , ஜெ.ஜெயலலிதா ஆகியோரது அமைச்சரவையில் அமைச்சராக பணியாற்றியுள்ளார்.
- இவரது மருமகள் திருமதி.கல்யாணி மதிவாணன், மதுரை காமராஜ் பல்கலைக் கழக துணை வேந்தராக பணியாற்றியுள்ளார். தற்போது மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவராக பணியாற்றி வருகின்றார்.

62] புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் அருகேயுள்ள விசலூரில் கிபி 10 - ம் நூற்றாண்டை சேர்ந்த 10 - கற்சிற்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

63] போதைப் பொருட்கள் கடத்தலுக்கு எதிரான , இந்தியப் பெருங்கடல் நாடுகளின் உள்துறை அமைச்சர்கள் மாநாடு , அக்டோபர் 29ல் கொழும்புவில் நடைபெற்றுள்ளது.

- The High Level Meeting of Interior Ministers of Indian Ocean Region (IOR) to Counter Drug Trafficking

64] தமிழ்நாட்டில் கும்பகோணத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் சிட்டி யூனியன் வங்கி , இந்தியாவிலேயே முதல் வங்கியாக , வங்கி பணிகளுக்காக " லட்சுமி " என பெயரிடப்பட்டுள்ள இயந்திர மனிதனை ( ரோபோட் ) சென்னை கிளையில் பணியமர்த்தியுள்ளது.

65] The 2016 Asia - Pacific Economic Cooperation (APEC)

- ஆசியா பசுபிக் நாடுகளின் பொருளாதார கூட்டுறவு மாநாடு -- 2016 , பெரு நாட்டின் லிமா நகரில் நவம்பர் 19 மற்றும் 20ல் நடைபெறுகிறது.
- Theme -- Quality Growth and Human Development

66] இண்டர்போல் எனப்படும் சர்வதேச காவல் அமைப்பின் { International Criminal Police Organization ( INTERPOL).} தலைவராக சீனாவைச் சார்ந்த Meng Hongwei நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

67] மத்திய பிரதேசம் வழங்கும் காளிதாஸ் சம்மான் விருது 2015 - 16ம் ஆண்டுக்கு ராஜ் பிசாரியாவுக்கும் ( Raj Bisaria ) 2016 -17ம் ஆண்டுக்கான விருது பன்ஷி கவுல்க்கு ( Banshi Kaul ) வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

68] பஞ்சாபில் நடைமுறையில் உள்ள சட்லெஜ் -யமுனா இணைப்பு கால்வாய் திட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்யும் வகையில் 2004-ஆம் ஆண்டு பஞ்சாப் சட்டமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இதனால் அண்டை மாநிலமான ஹரியானா கடுமையிலாக பாதிக்கப்பட்டது.

- இதனை எதிர்த்து ஹரியானா மாநிலம் தொடர்ந்த வழக்கில் , பஞ்சாப் மாநில அரசின் நடவடிக்கை அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்று

கூறி அந்த தீர்மானத்தை ரத்து செய்வதாக உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

69] நாடு முழுவதும் ஏடிஎம் இயந்திரங்களை மறுசீரமைப்பு செய்வதற்காக, ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் எஸ்.எஸ்.முந்த்ரா தலைமையில் 8 பேர் கொண்ட தனிக்குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.

70] Hand in Hand -- 2016

- இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான கூட்டு ராணுவப் பயிற்சி Hand in Hand -- 2016 , புனேவில் நவம்பர் 15 முதல் 27 வரை நடைபெறவுள்ளது.
- சீனாவின் யுன்னன் மாகாணத்தில் கடந்த 2007-ஆம் ஆண்டு தொடங்கிய கூட்டு ராணுவப் பயிற்சி ஆண்டுதோறும் சீனாவிலும் இந்தியாவிலும் மாறி, மாறி நடைபெறுகிறது.

71] பிரிட்டனின் ஈஸ்ட் ஆங்க்லியா பல்கலைக்கழகம் மற்றும் "குளோபல் கார்பன் புராஜெக்ட்' அமைப்பு அண்மையில் வெளியிட்ட ஆய்வறிக்கையில் , இந்தியாவில் படிம எரிபொருள்களை எரிப்பதன் மூலம் வெளியேறும் கரியமில வாயுவின் அளவு கடந்த 2015-ஆம் ஆண்டில் 5.2 சதவீதம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

- உலக அளவில் கரியமில வாயு வெளியேற்றத்தில் இந்தியா 6.3% பங்கு வகிக்கிறது.

72] தமிழகத்தைச் சேர்ந்த 3 சிறார்கள் உள்பட 31 குழந்தைகளுக்கு சிறந்த சாதனைக்கான தேசிய விருதை குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி வழங்கியுள்ளார்.

- இதில் கர்நாடக மாநிலம், தாவணகெரே மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி மஞ்சுநாத்தின் மகளும், இடதுகால் வளர்ச்சியின்றி பாதிக்கப்பட்டவருமான ரேவதி நாயக்குக்கு தங்கப் பதக்கம் அளிக்கப்பட்டது. எஞ்சிய 30 குழந்தைகளுக்கும் வெள்ளிப் பதக்கம்

வழங்கப்பட்டது. இவர்களில், தமிழகத்தைச் சேர்ந்த இரு சிறுமிகள், ஒரு சிறார் ஆகியோரும் அடங்குவர்.

- விளையாட்டுப் பிரிவில், தமிழகத்தைச் சேர்ந்த சி.ஆர்.ஹர்ஷவர்தினி, ரக்ஷிதா ரவி , புதிய கண்டுபிடிப்புகள் பிரிவில் எஸ்.ஏ.சிவசூர்யா ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

73] அருணாச்சல பிரதேசத்தின் மூன்று மாவட்டங்கள் Tirap, Changlang & Longding ஆகியவற்றில் சிறப்பு ஆயுதப்படை சட்டம் அமுல் செய்யப்படுவதாக மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

- மேற்கண்ட மூன்று மாவட்டங்களும் சிறப்பு ஆயுதப்படை சட்டம் பிரிவு 3ன் படி அமைதியற்ற பகுதிகளாக ( Disturbed area ) அறிவிக்கப்பட்டுள்ளது.

74] 9th Annual Meeting of International Regulatory Cooperation for Herbal Medicines (IRCH)

- மூலிகை மருந்துகளின் சர்வதேச ஒழுங்குமுறை கூட்டமைப்பின் 9வது வருடாந்திர மாநாடு , புதுடெல்லியில் நவம்பர் 08 - 10ல் நடைபெற்று முடிந்துள்ளது.

75] பிரான்சிலுள்ள “Alstom” நிறுவனம் தயாரித்த உலகின் முதலாவது ஹைட்ரஜன் ரயில் ஜெர்மனியின் பெர்லின் நகரத்தில் நடைபெறும் “Berlin InnoTrans Trade Show” எனும் வர்த்தக கண்காட்சியில் வெளியிடப்பட்டது.

- “hydrail” எனும் இந்த குறிப்பிட்ட ரயில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் ஹைட்ரஜன் எரிவாயு மூலம் செயல்படும்.
- இந்த ரயிலின் கூரை மீது ஹைட்ரஜன் எரிவாயு சிலிண்டர்கள் வைக்கப்பட்டிருக்கும். இதன் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு ரயில் இயங்குவதால் புகை உள்ளிட்ட எதுவும் வெளியாகாது. மேலும், இந்த எரிவாயு சிலிண்டர்கள் மூலம் ஒரே நேரத்தில் ஒரு ரயில் 600 Km முதல் 800 Km வரை பயணமாகும். மணிக்கு 140Kmph வேகத்தில் இந்த ரயில் பயணிக்கும்.

- ஜெர்மனியில் உள்ள Lower Saxony மாகாணத்தில் தான் இந்த நவீன ரயில் சேவை பயன்பாட்டிற்கு வரவுள்ளது.

76] காரக்பூர் ஐ.ஐ.டி.யினை சேர்ந்த புவி அறிவியல் மற்றும் சமூகவியல் துறை விஞ்ஞானிகள் அடங்கிய குழுவானது , ஒடிசாவில் அமைந்துள்ள கோனார்க் சூரிய கோவில் பகுதி அருகே புராணகாலத்தினை சேர்ந்த சந்திரபாகா என்ற ஆறு இருந்ததற்கான சான்றுகளை கண்டுபிடித்துள்ளனர்.

77] PETROTECH-2016, the 12th International Oil and Gas Conference and Exhibition

- 12வது சர்வதேச எண்ணெய் மற்றும் எரிவாயு மாநாடு மற்றும் கண்காட்சி PETROTECH - 2016 புதுடெல்லியில் டிசம்பர் 05 முதல் 07 வரை நடைபெறுகிறது.

78] மணிப்பூர் மாநிலத்தில் அமைந்துள்ள நன்னீர் ஏரி Loktak ஐ பாதுகாப்பது பற்றிய பரிந்துரைகளை வழங்க நான்கு நபர் குழுவை மத்திய வனம் , சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றம் துறை அமைச்சகம் நியமனம் செய்துள்ளது.

79] இந்தியா - பங்களாதேஷ் ராணுவங்கள் இணைந்து மேற்கொள்ளும் கூட்டு பயிற்சி 7வது Sampriti - 2016 , நவம்பர் 05 - 18 வரை டாக்காவில் நடைபெறுகிறது.

80] ஆம்னி பஸ்களுக்கு கட்டணம் நிர்ணயம் செய்ய ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி கே.என்.பாஷா தலைமையில் 6 நபர்கள் கொண்ட குழுவை மதுரை ஐகோர்ட்டு கிளை நியமனம் செய்துள்ளது.

குழு உறுப்பினர்கள்

01) போக்குவரத்து கமிஷனர்
02) போக்குவரத்து செயலாளர்
03) சாலை போக்குவரத்து கமிஷனர்
04) புள்ளியியல் துறை கமிஷனர்
05) நிதித்துறை துணை இயக்குநர்

81] இந்திய ரயில்வேயின் தூய்மை ரயில் திட்டத்தின் ( Swachh Rail Mission Of Indian Railway ) விளம்பர தூதராக Sulabh International அமைப்பின் நிறுவனர் பிந்தேஷ்வர் பதக் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

82] பஹ்ரைன் இண்டர்நேசனல் சேலஞ் பாட்மிண்டன் ஒற்றையர் இறுதிப் போட்டியில் இந்திய வீரர் பிரடுல் ஜோஷி ( Pratul Joshi ) தனது சகோதரர் ஆதித்யா ஜோஷியை தோற்கடித்து , தனது முதல் சர்வதேச பட்டத்தை வென்றுள்ளார்.

83] தெலுங்கு, குஜராத்தி, மராத்தி மற்றும் பஞ்சாபி உட்பட 11 உலக மொழிகளில் ( அஃபான் ஒரொமோ, அஹ்மாரிக், இக்போ, கொரியன், பிட்ஜின், திக்ரின்யா மற்றும் யொருபா ) பிபிசி உலக சேவை விரிவாக்கம் செய்யப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

- இதன் மூலம் பிபிசி உலக சேவை, ஆங்கிலம் உட்பட, 40 மொழிகளில் நேயர்களுக்குக் கிடைக்கும்.

84] மத்திய அரசின், கறுப்பு பணம் ஒழிப்பு நடவடிக்கையின் முக்கிய முடிவான 500 & 1000 ரூபாய் நோட்டுகள் ஒழிப்பு அறிவிப்பை எதிர்த்து / வாபஸ் வாங்க கோரி தீர்மானம் நிறைவேற்றிய முதல் மாநிலம் -- டெல்லி

- ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றிய முதல் மாநிலம் – சட்டீஸ்கர்.

85] Heart of Asia Confence

ஆஃப்கானிஸ்தான் தொடர்பாக " ஆசியாவின் இதயம் " என்ற பெயரிலான மாநாடு, பஞ்சாப் மாநிலம், அமிருதசரஸ் நகரில் டிசம்பர் 3ம் தேதி நடைபெற உள்ளது

86] TAPAS 201 (RUSTOM - II)

- மத்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால், நீண்ட தூரம் சென்று அதிக சக்தி வாய்ந்து தாக்கும் திறன் கொண்ட உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஆளில்லா விமானம் "TAPAS 201 (RUSTOM - II)" என்ற குண்டு வீசும் ஆளில்லா விமானம்,

பெங்களூரிலிருந்து 250 கிலோமீட்டர் தொலைவில் உள்ள சித்ரதுர்கா விமான சோதனை மையத்தில் (ஏரோநாட்டிக்கல் டெஸ்ட் ரேஞ்ச் (ஏடிஆர்)) வெற்றிகரமாக நேற்று பரிசோதிக்கப்பட்டது.

- நம்முடைய முப்படைகளின் நுண்ணறிவு, கண்காணிப்பு மற்றும் உளவுப் பணிகளுக்கு (ISR) இதனை பயன்படுத்த முடியும். 24 மணி நேரம் நீடித்து உழைக்கும் ஆற்றல் கொண்டது. எலக்ட்ரோ ஆப்டிக் (MREO), லாங் ரேஞ்ச் எலக்ட்ரோ ஆப்டிக் (LREO), செயற்கை ராடார் (SAR), மின்னணு புலனாய்வு (ELINT), புலனாய்வு தொடர்பியல் (COMINT) மற்றும் சூழ்நிலை விழிப்புணர்வு விண்கலங்கள் (எஸ்ஏபி) போன்ற பல்வேறு தகவல்களை தாங்கிச் செல்லும் திறன் கொண்டது. பகல் மற்றும் இரவு என நாள் முழுவதும் பயணங்கள் செய்ய ஏதுவானது. இரண்டு டன் எடைக்கொண்டது.

87] உலகின் அதிவேகத் திறனுள்ள சூப்பர் கம்ப்யூட்டர் பட்டியலில் தொடர்ந்து எட்டாவது முறையாக சீனாவின் கணினி முதலிடத்தைப் பிடித்துள்ளது.

- சன்வே தாய்ஹுலைட் என்ற அந்தக் கணினி, சீனாவின் தேசிய இணைவரிசைக் கணினிப் பொறியியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையத்தால் உருவாக்கப்பட்டது.
- இந்தக் கணினியால் நொடிக்கு 9300 கோடி ( 93 quadrillions calculations per seconds ) கணக்கீடுகளை ஒரு வினாடி நேரத்தில் செய்ய முடியும் என்பதால் உலகின் அதிவேக 500 கணினிகளின் பட்டியலில் இது முதலிடம் பெற்றுள்ளது.

88] செய்தி சிதறல்கள்

ooooooooooooooooooo

01) அமெரிக்காவுக்கான புதிய இந்தியத் தூதராக நவ்தேஜ் சர்னா பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

02) இந்திய - வங்கதேச எல்லைப் பாதுகாப்புப் படைகளின் கலந்தாலோசனைக் கூட்டம் வங்கதேசத்தின் சில்ஹெட் பகுதியில் நவ.15ல் தொடங்கியுள்ளது.

03) சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் சார்பில் ஆண்டுதோறும் சிறந்த வீரருக்கான விருது, சிறந்த கோல் கீப்பருக்கான விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

- 2016-ஆம் ஆண்டுக்கான உலகின் தலைசிறந்த ஹாக்கி கோல் கீப்பர் விருதுக்கு இந்திய அணியின் கேப்டனும், கோல் கீப்பருமான ஸ்ரீஜேஷின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- சிறந்த வளர்ந்து வரும் வீரர் விருதுக்கு இந்தியாவின் ஹர்மான்பிரீத் சிங் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

89] சர்ச்சைக்குரிய இஸ்லாமிய மத போதகர் ஜாகீர் நாயக் நடத்தி வரும் இஸ்லாமிய ஆய்வு அறக் கட்டளையை (ஐஆர்எப்) சட்ட விரோத அமைப்பாக அறிவித்துள்ள மத்திய அரசு, இந்த அறக்கட்டளைக்கு 5 ஆண்டுகள் தடை விதித்துள்ளது.

90] Raad ul Barq -- 2016 (Strike of Thunder)

பாகிஸ்தான் ராணுவம், பஞ்சாப் மாகாணத்தில் இந்திய எல்லையை ஒட்டி Raad ul Barq - 2016 (Strike of Thunder) என்ற தயார்நிலை பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

91] நவம்பர் 15 / 2016 வரை இந்தியாவில் 272 பொருட்களுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளதாக The Controller General of Patents, Designs & Trade Marks அமைப்பு தெரிவித்துள்ளது.

92] ராஜ்யசபா உறுப்பினராக உள்ள சச்சின் டெண்டுல்கர், 2014, நவம்பரில், பிரதமரின் கிராமப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ஆந்திராவின் புட்டம்ராஜுவரி கிராமத்தை தத்தெடுத்தார்.

- 2016 ஆகஸ்டில் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள உஸ்மானாபாத் மாவட்டத்தில் டோன்ஜா கிராமத்தை தத்தெடுத்துள்ளார்.
- தற்போது புட்டம்ராஜுவரி கிராமத்திற்கு அருகில் உள்ள கோலபள்ளி என்ற கிராமத்தையும் தத்தெடுத்து மேம்படுத்த முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளார்.

93] 3rd World Internet Conference
மூன்றாவது உலக இணைய மாநாடு , சீனாவின் Wuzhen நகரில் நடைபெறுகிறது.

94] India's First Cherry Blossom Festival
இந்தியாவின் முதல் செரி பிளாசம் திருவிழா , மேகாலயாவின் ஷில்லாங்கில் நவம்பர் 14 - 17 நடைபெறுகிறது.

95] மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உதவுவதற்காக No More Tension என்ற அலைபேசி செயலியை மத்திய சுகாதார துறை அமைச்சர் வெளியிட்டுள்ளார்.

- மேலும் Healthy India Initiative/Swastha Bharat-ek pehal என்ற இதழையும் வெளியிட்டுள்ளார்.

96] India, Myanmar and Thailand Friendship Motor Car Rally - 2016

- தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு இடையே சாலை போக்குவரத்தை மேம்படுத்த , இந்தியா -மியான்மர் - தாய்லாந்து நட்புறவு கார் பந்தயம் டெல்லி முதல் பாங்காங் வரை நடைபெறுகிறது.
- நவம்பர் 13ல் டெல்லி இந்தியா கேட்டில் துவங்கி டிசம்பர் 03 பாங்காங்கில் நிறைவு பெறுகிறது.

97] பெருநிறுவன மேலாண்மை ( Corporate Governance ) பிரிவில் , செயில் { Steel Authority of India Limited (SAIL) } நிறுவனம் தங்க மயில் விருது வென்றுள்ளது.

98] அமெரிக்காவில் வசிக்கும் இந்திய வம்சாவளி எழுத்தாளர் அமிதவ் கோஷ் க்கு 2016ம் ஆண்டுக்கான Tata Literature Live! Lifetime Achievement Award வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

- Ibis Trilogy – Sea of Poppies', 'River of Smoke' 'Flood of Fire', 'The Circle of Reason' 'The Shadow Lines', 'The Calcutta Chromosome', 'The Glass Place', 'The Hungry Tide', 'In An Antique Land', 'Dancing in Cambodia', 'At Large in Burma',

'The Imam and The Indian', 'The Great Derangement: Climate Change and The Unthinkable'. ஆகியவை இவர் எழுதிய புத்தகங்கள் ஆகும்.

- இதில் The Shadow Lines க்காக சாகித்ய அகாடமி விருது வென்றுள்ளார்.

99] இந்தியா ரஷ்யா கூட்டுத்தயாரிப்பில் உருவான பிரமோஷ் ஏவுகணையின் தாக்குதல் தொலைவை 290 கிலோ மீட்டரில் இருந்து 600 கிலோ மீட்டராக உயர்த்த இந்தியா ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

100] மைக்ரோசாப்ட் நிறுவனம், இந்தியாவிலே முதன்முறையாக சைபர் பாதுகாப்புக்கென மையம் ஒன்றை டெல்லியில் துவங்கியுள்ளது.

- உலகளவில் மைக்ரோ சாப்ட் நிறுவனத்தின் ஏழாவது சைபர் பாதுகாப்பு ஆலோசனை மையமாக டெல்லி மையம் துவங்கப்பட்டுள்ளது.

101] பஞ்சாப் மாநில அரசு நவம்பர் - 01ம்தேதியை புகையிலை இல்லா தினமாக அறிவித்துள்ளது.

* ( மே - 31 சர்வதேச புகையிலை எதிர்ப்பு தினம் )

102] அமெரிக்காவின் நாசா விண்வெளி மையத்தில்பணிபுரியும் விண்வெளி வீராங்கனை பெக்கி விட்சன் ( வயது - 56). உலக நாடுகளின் கூட்டு முயற்சியினால் விண்வெளியில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு நவம்பர் 18ல் பயணம் மேற்கொள்ள உள்ளார். இது இவரது மூன்றாவது விண்வெளி பயணமாகும். இதன் மூலம் உலகிலேயே மிக அதிக வயதில் விண்வெளி பயணம் செய்த முதல் வீராங்கனை என்ற பெருமையை அவர் பெற உள்ளார்.

- எக்ஸ்பிடிஷன் 50 / 51 என்று பெயரிடப்பட்டுள்ள இந்த பயணமானது ரஷ்யாவில் அமைத்துள்ள பைக்கானூர் விண்வெளி ஏவுதளத்தில் இருந்து நவம்பர் 18ல் நடைபெறுகிறது. அவருடன் ரஷ்யாவின் ஒலெக் னேவிட்ஸ்கி மற்றும் ஐரோப்பியா விண்வெளி மையத்தைச் சேர்ந்த தாமஸ் பெஸ்க்யூட் ஆகிய இருவரும் பயணிக்க உள்ளனர்.

- இந்த பயணத்தின் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்தின் தலைமைப் பொறுப்பை இரண்டாவது முறையாக வகித்தவர் என்ற பெருமையும் அவருக்கு கிடைக்க உள்ளது.
- இதற்கு முன்னதாக 2007-ஆம் ஆண்டில், அமெரிக்காவின் பார்பரா மோர்கன் என்ற வீராங்கனை தனது 55-ஆம் வயதில் விண்வெளிக்கு பறந்ததே சாதனையாக இருந்து வந்தது.

103] ஊக்கமருந்து சோதனையில் சிக்கிய இந்திய தடகள வீரர் தரம்பிர் சிங்கிற்கு போட்டிகளில் பங்கேற்க 8 ஆண்டு தடை விதிக்கப்பட்டுள்ளது.

104] நாட்டிலேயே முதல் முறையாக, சி.ஆர். பி.எப்., எனப்படும், மத்திய ரிசர்வ் போலீஸ் படையை சேர்ந்த பெண் போலீசார், நக்சலைட்டுகளை ஒடுக்கும் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

105] பிரான்ஸ் அரசின் உயரிய விருதான Legion of Honour , ஐ.நா. பொது சபை தலைவர் பான் கீ மூனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

106] உலகின் முதல் செயற்கை இருதய மாற்று அறுவை சிகிச்சையை 1969ஆம் ஆண்டு வெற்றிகரமாக செய்து காட்டிய, டாக்டர். டென்டன் கூலி வயது முதிர்வின் காரணமாக அமெரிக்காவில் ஹூஸ்டன் நகரில் காலமானார்.

107] கடலுக்கு அடியில் கண்காணிப்புத் திறனை அதிகரிக்கும் வகையில் உள்நாட்டிலேயே மேம்படுத்தப்பட்ட 4 வகையான சோனார் கருவிகள் இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- கொச்சியில் உள்ள ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கழகத்தில் இந்த சோனார்கள் தயாரிக்கப்பட்டன.

  * கடலுக்கு அடியில் நீர்மூழ்கி கப்பல்களுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால், சோனார் கருவிகள் உடனடியாக எச்சரிக்கை ஒலி எழுப்பும். அதே போல் ( * * கடலுக்கு அடியில் எதிரிநாட்டின் நீர்மூழ்கி கப்பல்கள் அசைவது தெரிந்தாலும் சோனார் கருவிகள் கண்காணித்து, கடற்படையினருக்கு உஷார் படுத்தும்.

01) Abhay
02) Humsa UG
03) AIDSS --- Advanced Indigenous Distress sonar system for submarines.
04) NACS ---- Near - field Acoustic Characterisation System.

**108] The Marrakech 2016 UN climate change conference**

- புவிவெப்பம் தொடர்பான ஐ.நா.சபையின் முக்கிய கூட்டம் மொராக்கோவின் மர்ராகேஷில் நடைபெற்றது.
- இந்தியா மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் உட்பட 200 நாடுகள் பங்கேற்ற இம்மாநாட்டில், 'புவி வெப்ப மாற்றத்தால் ஏற்படக் கூடிய ஆபத்தை தடுக்க வேண்டியதே சர்வதேச நாடுகளின் அவசரக் கடமை' என்ற பிரகடனம் வெளியிடப்பட்டது.
- இதுவரையில்லாத அளவுக்கு புவி வெப்பத்தில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. இதே நிலை நீடித்தால் ஈடுசெய்ய முடியாத பாதிப்புகளை சந்திக்க வேண்டியிருக்கும். அபாயகரமான இந்தப் போக்கை தடுத்து நிறுத்த வேண்டியதே, உலக நாடுகளின் தலையாயப் பணியாகவும், உடனடி நடவடிக்கையாகவும் இருக்க வேண்டும் என, அப்பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது.

- [ புவி வெப்பமயமாதலால் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளைத் தடுத்து நிறுத்த, உலகளாவிய சராசரி வெப்ப நிலையை, 2.0 டிகிரி செல்ஷியஸுக்கு குறைவாக இருப்பதை உறுதி செய்ய 2015-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பாரிஸ் ஒப்பந்தம் வகை செய்கிறது. ]

**109] National Legal Services Authority (NALSA)**

* தேசிய சட்ட பணிகள் ஆணைய செயல் தலைவராக , உச்ச நீதிமன்ற நீதிபதி ஜெகதீஷ் சிங் கேஹர் அவர்களை நியமனம் செய்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

* கடந்த 6 ஆண்டுகளாக இப்பதவியில் இருந்துவந்த உச்ச நீதிமன்ற நீதிபதி அனில்.R. தவே பதவியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

**110] விலங்குகளை தாக்கும் Brucellosis என்னும் நோய் பற்றிய சர்வதேச மாநாடு ( The International Conference on Brucellosis 2016 ) புதுடெல்லியில் நடைபெறுகிறது.**

- பசு, எருது, ஆடு, பன்றி, நாய் ஆகியவற்றை இந்த நோய் தாக்குகிறது.

111] ◆ National Integration Week ◆
[ ஹிந்தியில் Quami Ekta Week ]

⁎ தேசிய ஒருமைப்பாடு வாரம் நவம்பர் 19 - 25 வரை கடைபிடிக்கப்படுகிறது.

¶ நவம்பர் 19 - 25 வரை ஒவ்வொரு நாளும் சிறப்பு குறியீடாக அடையாள படுத்தப்பட்டுள்ளது. ¶

- நவம்பர் 19 - தேசிய ஒருமைப்பாடு தினம்
- நவம்பர் 20 - சிறுபான்மையினர் நல்வாழ்வு தினம் ( Welfare of Minorities Day )
- நவம்பர் 21 - மொழி நல்லிணக்க நாள் ( Linguistic Hormony Day )
- நவம்பர் 22 - நலிந்த பிரிவினர் தினம் ( Weaker Sections Day )
- நவம்பர் 23 - கலாச்சார ஒற்றுமை தினம் ( Cultural Unity Day )
- நவம்பர் 24 - பெண்கள் தினம் ( Womens Day )
- நவம்பர் 25 - சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினம் ( Conservation Day )

112] தெஹ்ரிக் இ தாலிபானின் கிளை அமைப்பான ஜமாத் உல் அஹர் மற்றும் லஷ்கர் இ ஜாங்வி அல் அலாமி ஆகிய 2 தீவிரவாத குழுக்களுக்கு பாகிஸ்தான் அரசு தடை விதித்துள்ளது.

113] சீன ஓபன் பேட்மின்டன் இறுதிப் போட்டியில் சீனாவின் சன் யூ-வை வீழ்த்தி இந்தியாவின் பி.வி.சிந்து சாம்பியன் பட்டம் வென்றார்.

114] Mirror Account

பிரதமர் மோடி உயர்மதிப்பு பண தாள்கள் செல்லாது என அறிவித்தவுடன் , RBI தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் பழைய 500, 1,000 ரூபாய் நோட்டுகளை மாற்றி வழங்க அனுமதி மறுத்துள்ளது.

- கூட்டுறவு கடன் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் அருகில் உள்ள மத்திய கூட்டுறவு வங்கியில் மிரர் அக்கவுன்ட் (Mirror Account) தொடங்க வேண்டும். அதன் மூலம் பயிர்க் கடன், நகைக் கடன்களை மத்திய கூட்டுறவு வங்கிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

- மிரர் அக்கவுன்ட்' என்றால் என்ன?

கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒருவர் ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டில் உள்ள மத்திய கூட்டுறவு வங்கி அல்லது நகர்ப்புற கூட்டுறவு வங்கியில் இணையான கணக்கு (பேரரல் அக்கவுன்ட்) தொடங்க வேண்டும். அதன் பெயர் மிரர் அக்கவுன்ட். இந்த கணக்கின் மூலம் கூட்டுறவு கடன் சங்கம் கொடுக்கும் ரசீதை காட்டி கூட்டுறவு வங்கிகளில் பணத்தை பெற்றுக்கொள்ளலாம். அதேபோல, சங்கத்துக்கு பணம் செலுத்த வேண்டியதாக இருந்தாலும், வங்கியில் பணம் செலுத்தி அந்த ரசீதை சங்கத்தில் சமர்ப்பித்தால் போதும்.

115] தேர்தல் மற்றும் வங்கிகளில் பணம் மாற்ற வரும் வாடிக்கையாளர்களின் விரலில் இடப்படும் அழியாத மை யை தயாரித்து வழங்குபவர்கள். ---- கர்நாடக அரசுக்கு சொந்தமான மைசூரு பெயிண்ட்ஸ் மற்றும் வார்னிஷ் நிறுவனம்

116] நாட்டில் பணம் அச்சடிக்கும் இயந்திர தொழிற்சாலைகள் நான்கு இடத்தில் உள்ளன.

- மகாராஸ்டிராவில் நாசிக் மற்றும் மத்தியப் பிரதேச மாநிலம் தேவாஸ் பகுதிகளில் இரண்டு பணம் அச்சடிக்கும் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.
- இதைத் தவிர மைசூர் மற்றும் சல்போனியிலும் ( மே.வங்கம் ) இரண்டு பணம் அச்சடிக்கும் தொழிற்சாலைகளில் இயங்கி வருகின்றன.

  * ரிசர்வ் வங்கியின் பாரதிய ரிசர்வ் பேங்க் நோட் முத்ரன் நிறுவனமும் (Bharatiya Reserve Bank Note Mudran Private Limited) இந்திய நிதியமைச்சகத்தின் செக்யூரிட்டி பிரிண்டிங் மற்றும் மிண்டிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியாவும் (Security Printing and Minting Corporation of India Limited) இணைந்து பேங்க் நோட் பேப்பர் மில் இந்தியா என்ற நிறுவனத்தை மைசூருவில் அமைத்துள்ளன.

117] மரண தண்டனையை ரத்து செய்வது தொடர்பாக ஐ.நா. சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை எதிர்த்து இந்தியா வாக்களித்துள்ளது.

- தீர்மானத்துக்கு ஆதரவாக 115 வாக்குகளும், எதிராக 38 வாக்குகளும் பதிவாகின.
- அதேவேளையில், நாடுகளின் சட்ட உரிமையை உறுதி செய்வது தொடர்பான சட்டத் திருத்த மசோதாவுக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தது.
- சட்டத் திருத்தத்துக்கு ஆதரவாக 76 வாக்குகளும், எதிராக 72 வாக்குகளும் பதிவாகின.

118] முஸ்லீம் வங்கி

* தற்போது இருக்கும் வங்கி நடைமுறையில் முஸ்லீம்களுக்கு தனியான பிரிவை ஏற்படுத்த ரிசர்வ் வங்கி பரிந்துரை செய்துள்ளது.

* முஸ்லீம் மக்கள் அவர்களுடைய மத நம்பிக்கைகளின் காரணமாக வங்கி அமைப்புக்குள் வருவதில்லை.

* மத்திய அரசும் ரிசர்வ் வங்கியும் முஸ்லீம் மக்களை வங்கி அமைப்புக்குள் கொண்டுவரும் நோக்கில் தனியான முஸ்லீம் வங்கிகளை ஏற்படுத்த உண்டான வாய்ப்புகளை ஆராய்ந்து வருகிறது.

* முஸ்லீம் வங்கிகள் என்பது வட்டிகள் ஏதும் விதிக்கப்படாமல் இயங்குவது. முஸ்லீம் மதத்தின்படி வட்டி விதிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

119] பிரதான் மந்திரி கிராமீன் ஆவாஸ் யோஜனா (அனைவருக்கும் வீடு)

* வரும் 2022-ம் ஆண்டில் நாட்டின் 75-வது சுதந்திர தின விழா கொண்டாடப்பட உள்ளது. அதற்குள் அனைத்து இந்தியர்களுக்கும் வீடுகளைக் கட்டிக் கொடுக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

* உத்தரப் பிரதேசம் ஆக்ராவில் நடந்த விழாவில் ‘பிரதான் மந்திரி கிராமீன் ஆவாஸ் யோஜனா’ (அனைவருக்கும் வீடு) திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கிவைத்தார்.

* இத்திட்டத்தில் விவசாயிகள் முதல் பழங்குடியினர் வரை அனைவருக்கும் 3கோடி வீடுகள் 2022க்குள் கட்டிக் கொடுக்கப்படும்.

120] உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஐ.என்.எஸ். சென்னை போர்க்கப்பல் இன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

- ஐஎன்எஸ் சென்னை போர்க்கப்பலை இந்திய கடற்படையின் வடிவமைப்பு இயக்குநரகம் வடிவமைத்தது. ஏவுகணைகளை கொண்டு நீண்ட தொலைவு இலக்குகளை தாக்கும் திறன் கொண்டது.
- 164 மீட்டர் நீளம் கொண்ட இந்த போர்க்கப்பல் 7500 டன் எடையை சுமந்தபடி செல்லும் சக்தி கொண்டதாகும். இதே வகையிலான 'ஐ.என்.எஸ். கொல்கத்தா' கடந்த 16-8-2014 அன்றும், 'ஐ.என்.எஸ். கொச்சி' கடந்த 30-9-2015 அன்றும் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.
- இவ்விரு கப்பல்களை விடவும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப அம்சங்களுடன், தரையில் இருந்து பாய்ந்து சென்று தரையில் உள்ள இலக்கை தாக்கி அழிக்கும் 'பிரமோஸ்' ஏவுகணை, மற்றும் தரையில் இருந்து வானில் உள்ள இலக்கை தாக்கி அழிக்கும் 'பரக்-8' ஏவுகணை போன்றவை 'ஐ.என்.எஸ். சென்னை' போர்க்கப்பலில் இணைக்கப்பட்டுள்ளன.
- மும்பையில் உள்ள மஸாகோன் கப்பல் கட்டும் பணிமனையில் உருவாக்கப்பட்ட இந்த போர்க்கப்பல் மேற்கு கடற்படை கட்டுப்பாட்டு தலைமையின்கீழ் இயங்கும்

121] Conference of Directors-General of Police (DGP)

- மாநில போலிஸ் டி.ஜி.பி.க்கள் வருடாந்திர மாநாடு , நவம்பர் 25 முதல் 28 வரை தெலுங்கானா தலைநகர் ஹைதராபாத்தில் அமைந்துள்ள சர்தார் வல்லபாய் படேல் தேசிய காவல் பயிற்சி மையத்தில் நடைபெறவுள்ளது.
- கடந்த ஆண்டு குஜராத்தின் கட்ச் நகரில் நடைபெற்றது.

122] கேரள மாநிலம் பத்தினம்பட்டா மாவட்டத்தில் அமைந்துள்ள புகழ் பெற்ற ஐயப்பன் கோவில், தற்போது, சபரி மலை ஸ்ரீ தர்ம சாஸ்தா என்று அழைக்கப்பட்டு வந்த நிலையில், கோவிலின் பெயரை சபரி மலை ஸ்ரீ ஐயப்ப

சாமி கோவில் என்று மாற்றப்பட்டுள்ளதாக திருவாங்கூர் தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

123] உலகில் 'செல்பி' எடுக்கும்போது இறந்தவர்களின் எண்ணிக்கையில் இந்தியா முதலிடத்தை பிடித்துள்ளது என அமெரிக்காவைச் சேர்ந்த கார்நிகி மெலன் பல்கலைக்கழக. ஆய்வு குழுவினர் தெரிவித்துள்ளனர்.

- 2014 ஆம் ஆண்டு 15 பேரும், 2015ல் 39 பேரும் 2016ல் 73 பேரும் செல்பி எடுக்கும் போது இறந்துள்ளனர். இதில் இந்தியாவில் செல்பி எடுக்கும் போது இறந்தவர்கள் மட்டும் 76 பேர். இதன் மூலம் செல்பி எடுக்கும்போது இறந்தவர்களின் எண்ணிக்கையில் முதலிடத்தை இந்தியா பிடித்துள்ளது.

124] சர்வதேச நீதிமன்றத்தில் முதல் இந்திய நீதிபதியாக இருந்தவர் டாக்டர் நாகேந்திர சிங். அவரது நினைவாக உலக அமைதிக்க பாடுபவர்களுக்கு 'சர்வதேச அமைதி விருது' வழங்கப்பட்டு வருகிறது.

⁕ உலக நாடுகளின் அமைதிக்காக பல முயற்சிகளை மேற்கொண்டு வரும் ஆன்மீக குரு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரை கவுரவிக்கும் விதமாக சர்வதேச அமைதி விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

125] உத்தர பிரதேச மாநிலம் ஆக்ரோ-லக்னோ இடையே 302 கி.மீ. தொலைவுக்கு உ.பி.மாநில அரசின் சார்பில் ரூ.13,200 கோடி செலவில் எக்ஸ்பிரஸ் சாலை அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் மிகவும் நீண்ட தூர எக்ஸ்பிரஸ் சாலையான இச்சாலை திறப்பு விழா இன்று நடந்தது.

- விழாவின்போது இந்திய விமானப்படைக்கு சொந்தமான 6 போர் விமானங்கள் ( மிராஜ் 2000 மற்றும் சுகோய் ரகம் , தலா மூன்று ) வரிசையாக தரையிங்கின.
- போர் உள்ளிட்ட அவசரகாலங்களில் போர் விமானங்களில் நெடுஞ்சாலையில் இறக்குவதற்காக இந்த சோதனை நடந்தது. இதற்காகவே பிரத்யோகமாக 2கி.மீ. தூரத்திற்கு மேம்பட்ட சிறப்பான சாலை அமைக்கப்பட்டுள்ளது.

- இதே போன்று கடந்த ஆண்டு யமுனா எக்ஸ்பிரஸ் சாலையிலும் இந்திய விமானப்படைக்கு சொந்தமான போர் விமானம் தரையிறக்கி சோதனை செய்யப்பட்டது.

126] கண்டம் விட்டு கண்டம் தாவும் ப்ருத்வி 2 ஏவுகணை, இன்று ஒடிசாவின் சந்திப்பூர் ஏவுகணை தளத்தில் சோதனை செய்யப்பட்டது. இந்த சோதனை வெற்றி அடைந்திருப்பதாக இந்திய பாதுகாப்புத்துறை அறிவித்துள்ளது.

- ப்ருத்வி 2 ஏவுகணை 350 கி.மீ., தூரத்தில் உள்ள இலக்கை தாக்கும் திறன் கொண்டது. ப்ருத்வி 2 ஏவுகணை 500 கிலோ முதல் 1000 கிலோ வரையிலான போர் சாதனங்களை சுமந்து செல்லும் திறன் கொண்டது. இரட்டை என்ஜின்களை கொண்ட இந்த ஏவுகணை, திரவ உந்துசக்தியால் இயங்கக் கூடியது. இதற்கு முன் இந்த ஆண்டின் பிப்ரவரி 16 ம் தேதி ப்ருத்வி 2 ஏவுகணை சோதனை செய்து பார்க்கப்பட்டது.

127] உலகின் தலைசிறந்த 8 வீரர்கள் பங்கேற்கும் ஏடிபி உலக டூர் பைனல்ஸ் என்றழைக்கப்படும் ஆடவர் உலக டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதிப்போட்டியில், நடப்பு சாம்பியனான செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சை , பிரிட்டனின் ஆன்டி முர்ரே தோற்கடித்து சாம்பியன் ஆகியுள்ளார்.

128] Sumitra Charat Ram Life Time Achievement Award

* பிரபல புல்லாங்குழல் இசைக்கலைஞர் பண்டிட் ஹரி பிரசாத் சௌராஷியாவுக்கு , அவரது இசை பணியை பெருமைப்படுத்தும் விதமாக 2016ம் ஆண்டுக்கான சுமித்ரா சரட் ராம் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது.

129] ஆக்ஸ்போர்டு அகராதி Post Truth என்ற வார்த்தையை இந்த ஆண்டுக்கான வார்த்தையாக தெரிவு செய்துள்ளது.

130] உலக அளவில் பிரபலமான சமூக வலைதளங்களில் முக்கியமான ட்விட்டர் 10 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

- ட்விட்டர் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி -- ஜாக் டோர்சி.
- தொடக்கத்தில் ட்விட்டரில் அதன் முகப்புப் பக்கத்தில் 5 வார்த்தைகள் மட்டுமே பதிவிட முடியும். தற்போது 140 எழுத்துகள் வரை பதிவிடலாம்.

131] National Student Startup Policy (NSSP)

- தொழில்நுட்ப ரீதியாக மாணவர்கள் புதுத் தொழில் முயற்சிகளைத் தொடங்குவதற்கு உதவும் " தேசிய மாணவர் சுயதொழில் கொள்கைத் திட்டத்தை " இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணப் முகர்ஜி நவம்பர் 17 அன்று தொடங்கிவைத்தார்.

- அகில இந்தியத் தொழில்கல்வி கவுன்சில் (ஏ.ஐ.சி.டி.இ.) அமைப்பால் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டது.

- அடுத்த பத்தாண்டுகளில் தொழில்நுட்ப அடிப்படையிலான ஒரு லட்சம் திட்டங்களை உருவாக்கி அதன் மூலம் 10 ஆண்டுகளில் 10 லட்சம் வேலை வாய்ப்புகளை உண்டாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- சிறந்த தொழில்முனைவுச் சூழலை உருவாக்கி முடிவுகளை எடுக்கும் திறன்களையும் இளைஞர்களிடம் உருவாக்குவது இதன் நோக்கம்.

132] Motor neurone disease

நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த மருத்துவர்கள், மோட்டார் நியூரான் நோயால் பாதிக்கப்பட்ட 58 வயதுப் பெண்ணின் மூளையில் கணிப்பொறியுடன் தொடர்புகொள்ளும் கருவி ஒன்றை அறுவை சிகிச்சை மூலமாகப் பதித்துள்ளனர்.

- மோட்டார் நியூரான் நோயால் பாதிக்கப்பட்டுப் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட அந்தப் பெண் மற்றவர்களிடம் ஸ்பீச் கம்ப்யூட்டர் வழியாகத் தொடர்பு கொள்ள இந்த அறுவைசிகிச்சை உதவும்.
- மூளையில் கணிப்பொறியை இயக்கும் கருவியைப் பதிக்கும் இந்த அறுவை சிகிச்சை உலக அளவில் முதல் முறையாக முயற்சிக்கப்பட்டுள்ளது.

- உடலில் எந்தப் பகுதியையும் அசைக்க முடியாத அளவுக்கு அவரது மோட்டார் நியூரான்கள் பாதிக்கப்பட்டிருந்தன. மூளையின் செயல்பாட்டை மூளையில் பதிக்கப்பட்டுள்ள எலக்ட்ரோகார்ட்டிகோகிராஃப் (Electrocorticograph) கருவி அறிந்து அதை ஸ்பீச் கம்ப்யூட்டர் வழியாக வார்த்தைகளாக மாற்றி மற்றவர்களிடம் அப்பெண் தான் விரும்புவதைப் பேச முடியும். இது முழுமையாக வயர்லெஸ் தொழில்நுட்பத்தில் இயங்கக்கூடியது.

133] சர்வதேச நீதிமன்றத்திலிருந்து ரஷ்யா விலகுவதாக அந்நாட்டின் அதிபர் விளாடிமிர் புதின் நவம்பர் 16 அன்று அறிவித்தார்.

134] பத்மவிபூஷண் விருது பெற்ற பிரபல கர்நாடக இசைக் கலைஞர் பாலமுரளி கிருஷ்ணா, உடல்நலக்குறைவால் காலமானார்.

- இவர் ஆந்திர மாநிலம், கிழக்கு கோதாவரியில், சங்கரகுப்தம் என்ற ஊரில், பட்டாபி ராமையயா - சூரியகாந்தம் தம்பதியருக்கு 1930ம் ஆண்டு ஜூலை 2-ம் தேதி பிறந்தவர்.
- 1976-ல் சிறந்த பாடகருக்கான விருதை, ஹம்சகீதே என்கிற கன்னடப் படத்துக்காகப் பெற்றார். 11 வருடங்கள் கழித்து, மாதவச்சாரியா என்கிற படத்துக்கு சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருதைப் பெற்றுள்ளார்.
- தமிழ், தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருதம் உள்ளிட்ட பல மொழிகளில் 400-க்கும் மேற்பட்ட கர்நாடக பாடல்களுக்கு இசையும் அமைத்துள்ளார்.
- இந்திய நாட்டின் உயரிய விருதுகளான பத்மவிபூஷண், பத்மபூஷண், பத்மஸ்ரீ விருதையும், இரண்டு முறை தேசிய விருது, பிரான்ஸ் நாட்டின் உயரிய விருதுகளில் ஒன்றான செவாலியே சிவாஜி, சங்கீத கலாநிதி (1975), சங்கீத கலாசிகாமணி விருது உள்ளிட்ட பல விருதுகளை பெற்றுள்ளார்.

135] பிரித்வி - 1 ஏவுகணை == இந்திய ராணுவத்தின் தரைப்படை ஆயுதம்

- பிரித்வி - 2 ஏவுகணை == இந்திய விமானப்படை ஆயுதம்
- பிரித்வி - 3 ஏவுகணை == இந்திய கடற்படை ஆயுதம்.

136] சர்வதேச கடல்சார் அமைப்பின், வீரதீர செயலுக்கான விருதுக்கு இந்தியாவின் கேப்டன் ராதிகா மேனன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். சர்வதேச அளவில் இந்த விருதைப் பெறும் முதல் பெண் ராதிகாதான்.

- சர்வதேச அளவில் தங்களது உயிரையும் பணயம் வைத்து கடல் பகுதிகளில் மீட்பு பணிகளில் ஈடுபடுவோருக்கு சர்வதேச கடல்சார் அமைப்பு (International Maritime Organisation) ஆண்டு தோறும் வீரதீர விருது வழங்கி கவுரவித்து வருகிறது. இந்த அமைப்பு ஐ.நா.வின் கட்டுப் பாட்டில் இயங்கி வருகிறது.

137] சுவிஸ் வங்கிகளில் வரும் 2018 செப்., மாதத்திற்கு பின் துவக்கப்படும் வங்கி கணக்கு விவரங்களை இந்தியாவிடம் அளிக்க சுவிஸ் ஒப்புதல் தெரிவித்துள்ளது.

* பதுக்கல் பணம் :

- சுவிட்சர்லாந்தில் உள்ள வங்கிகள் தங்களிடம் கணக்கு வைத்திருப்பவர்களின் விவரங்களை மிகவும் ரகசியமாகப் பாதுகாக்கின்றன. இதனால் கறுப்புப் பணம் பதுக்குவோரின் சொர்க்கபுரியாக சுவிஸ் வங்கிகள் உள்ளன. சுவிஸ் வங்களில் கணக்கு வைத்துள்ள இந்தியர்களின் விவரங்களை பலமுறை கோரப்பட்ட போதும் அது தற்போதுவரை நிலுவையில்தான் உள்ளது.

2019ல் வங்கி கணக்கு பரிமாற்றம் :

- இந்நிலையில் மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: சர்வதேச அளவில், தங்கள் நாட்டில் உள்ள இந்தியர்களின் வங்கிக் கணக்கு தொடர்பான விவரங்களை இந்தியாவுடன் பரிமாறிக்கொள்ள சுவிட்சர்லாந்து ஒப்புக் கொண்டுள்ளது. ஆனால் 2018-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்துக்குப் பின் சுவிஸ் வங்கிகளில் உள்ள இந்தியர்களின் கணக்குகள் தொடர்பான விவரங்கள் மட்டுமே கிடைக்கும். 2019-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில்தான் முதல் தகவல் பரிமாற்றம் நடைபெறும். இதேபோல

இந்தியாவும் தன்னிடம் உள்ள சுவிஸ் நாட்டவர்கள் வங்கிக் கணக்கு விவரங்களை அந்நாட்டிடம் அளிக்கும். இது தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

138] அணு ஆயுதங்களை தாங்கிசெல்லும் அக்னி-1 ஏவுகணை சோதனை வெற்றி

* இந்தியா அக்னி-1 ஏவு கணையை தயாரித்துள்ளது. இது 1 டன்னுக்கு அதிகமான எடையுள்ள அணு ஆயுதங்களை ஏற்றிசெல்லும் திறன் படைத்தது. இது 12 டன் எடையுள்ளது. 15 மீட்டர் நீளம் கொண்டது. இது குறிப்பிட்ட இலக்கை மிக துல்லியமாக பறந்து சென்று தாக்கும் வல்லமை கொண்டது. எனவே, இது இந்திய ராணுவத்தில் ஏற் கனவே இடம் பெற்றுள்ளது.

* இந்த அக்னி-1 ஏவுகணை பரிசோதனை ஒடிசாவில் உள்ள அப்துல்கலாம் தீவில் இருந்து (வீலர் தீவு) இன்று காலை 10.10 மணிக்கு ஏவி பரிசோதிக்கப்பட்டது. அப்போது அது 700 கி.மீட்டர் தூரம் பறந்து சென்று குறிப் பிட்ட இலக்கை தாக்கியது.

139] சமஸ்கிருத மொழியை ஊக்குவிக்கும் வகையில் முன்மாதிரியான பங்களிப்பு : தாய்லாந்து இளவரசி மஹா சக்ரி ஸ்ரின்தோர்னுக்கு ' மற்றும் அமெரிக்க மொழியிலாளர் ஜார்ஜ் கார்டோனா ஆகிய இருவருக்கு உலக சமஸ்கிருத விருது' பட்டம்.

* சமஸ்கிருத மொழியை ஊக்குவிக்கும் வகையில் முன்மாதிரியான பங்களிப்பை செலுத்தியமைக்காக இளவரசி மஹா சக்ரி ஸ்ரின்தோர்னுக்கும், அமெரிக்க மொழியிலாளர் ஜார்ஜ் கார்டோனாவிற்கும், 'உலக சமஸ்கிருத விருதை' துணை குடியரசுத்தலைவர் திரு. ஹமீத் அன்சாரி வழங்கினார். இளவரசி ஸ்ரின்தோர்ன் கடந்த ஆண்டு 16வது உலக சமஸ்கிருத மாநாட்டை தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் 5 நாட்களுக்கு நடத்தினார். இதில் உலகம் முழுவதிலும் இருந்து 60க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 600 சமஸ்கிருத அறிஞர்கள் பங்கேற்றனர்.

140] விண்வெளி ஆராய்ச்சிக்கு சீனா அனுப்பிய 2 விண்வெளி வீரர்கள், ஒருமாதகால ஆய்வுக்கு பின்னர் 'Shenzhou 11' விண்கலம் மூலம் மங்கோலியா நாட்டில் பத்திரமாக தரையிறங்கினர்

* விண்வெளியில் நிரந்தரமான ஆய்வு நிலையத்தை நிறுவிட திட்டமிட்டுள்ள சீனா, கடந்த 2013-ம் ஆண்டு 'Tiangong 1' என்ற விண்கலத்தை விண்ணில் செலுத்தியது. இந்த விண்கலத்தில் சென்ற மூன்று சீன விஞ்ஞானிகள், 15 நாட்கள் விண்வெளியில் தங்கியிருந்து பல்வேறு கட்ட ஆராய்ச்சிகளை நடத்தி முடித்து, வெற்றிகரமாக பூமிக்கு திரும்பினர். இதனையடுத்து, ஜிகுவான் மாகாணத்தில் உள்ள கோபி பாலைவனம் பகுதியில் இருந்து 'Tiangong 2' என்ற விண்கலத்தை, கடந்த செப்டம்பர் மாதம் 15-ம் தேதி வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. இந்த விண்கலம் மூலம் சென்ற விண்வெளி வீரர்களான Jing Haipeng, Chen Dong ஆகியோர், பூமியின் மேலே சுமார் 393 கிலோமீட்டர் தூரத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ள ஆய்வுகூடத்தில், 30 நாள் தங்கியிருந்து பல்வேறு ஆராய்ச்சிகளை நடனத்தினர்.

141] ஆக்ரா - லக்னோ நெடுஞ்சாலையில், விமானப்படையின் போர் விமானங்களை தரையிறக்கி, சாலை போக்குவரத்து தொடங்கப்பட்டது.

- ஆக்ரா - லக்னோ இடையில், 302 கிலோ மீட்டர் நீளம் கொண்ட அதிவிரைவு நெடுஞ்சாலை, 6 பாதைகளைக் கொண்டதாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 23 மாதங்களில் அமைக்கப்பட்ட இந்த நெடுஞ்சாலையில், 3.3 கிலோ மீட்டர் தொலைவு பாதை, போர் விமானம் புறப்பட்டுச் செல்லவும், தரையிறங்கவும் வசதியாக அமைக்கப்பட்டுள்ளது. இந்திய விமானப்படையின் Mirage மற்றும் Sukhoi போர் விமானங்களை இயக்கி, இந்த நெடுஞ்சாலை இன்று தொடங்கி வைக்கப்பட்டது. உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு. அகிலேஷ் யாதவ் மற்றும் அவரது தந்தை திரு. முலாயம்சிங் யாதவ் மற்றும் விமானப்படை அதிகாரிகள் உள்ளிட்டோர் விழாவில் பங்கேற்றனர். ஆக்ரா, ஃபெரோசாபாத், மெயின்புரி, உன்னாவோ, லக்னோ உள்ளிட்ட 10 மாவட்டங்களை இணைக்கும் இந்த நெடுஞ்சாலை 15 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

142] ஏ.டி.பி.,டென்னிஸ்: பைனலில் ஆன்டி முர்ரே வெற்றி
* லண்டனில் நடைபெற்ற ஏ.டி.பி., வேர்ல்ட் டூர் டென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் பிரிட்டன் வீரர் ஆன்டி முர்ரே வெற்றி பெற்றார். இறுதிப்போட்டியில் செர்பிய வீரர் ஜோக்கோவிச்சை எதிர்கொண்ட முர்ரே 6-3, 6-4 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்றார்.

143] ஒசூர் அருகே 13-ஆம் நூற்றாண்டு கல்வெட்டு கண்டெடுப்பு
* ஓசூர் அருகே பஸ்தியில் 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நடுகல் மற்றும் கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

* கிருஷ்ணகிரி மாவட்ட வரலாற்றுத் தேடல் குழு அமைப்பாளர் அறம் கிருஷ்ணன் தலைமையில் வரலாற்று ஆய்வாளர் வீரராகவன், சுகவணமுருகன், பிரியன், மஞ்சுநாத் ஆகியோர் இதைக் கண்டெடுத்தனர்.

* இதில் காணப்பட்ட நடுகல் புலிகுத்தப்பட்டான் என்ற வகையைச் சேர்ந்த சொர்க்க வகை நடுகல்லாகும். இரண்டு அடுக்கு கொண்ட இந்த நடுகல்லின் முதல் அடுக்கில் போரில் இறந்த வீரனின் சிற்பமும், 2- ஆவது அடுக்கில் இறந்த வீரனை தேவலோகத்தில் வரவேற்பது போன்றும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

* இந்த நடுகல் ஆறடி உயரமும், நான்கடி அகலமும் கொண்டதாக உள்ளது. மேலும் போர்வீரனின் வலது கையில் கூர்மையான ஆயுதம் மூலம் புலியைக் குத்துவது போன்றும், பாய்ந்து வரும் புலி வீரனின் வலது கால் தொடையின் மீது தனது இரண்டு முன் கால்களையும் பதித்துள்ளது போலவும் உள்ளது.

144] மொபிக்விக் - பி.எஸ்.என்.எஸ். இடையே ஒப்பந்தம்

* தொலைப்பேசி கட்டணம் செலுத்த பணமில்லாமல் தவிக்கும் வாடிக்கையாளர்களுக்கு உதவ பி.எஸ்.என்.எல். நிறுவனம் புதிய வசதியை அறிமுகம் செய்துள்ளது. இதற்காக, மொபிக்விக் (MobiKwik) - பி.எஸ்.என்.எஸ். இடையே ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது.

* இதன்படி, மொபிக்விக் மொபைல் அப்ளிகேஷன் மூலம் பி.எஸ்.என்.எல். சேவைக்கான கட்டணத்தைச் செலுத்த முடியும். குறிப்பாக, இவ்வாறு செலுத்தப்படும் பணத்திற்கு சேவைக்கட்டணம் எதுவும் வசூலிக்கப்படாது.

145] துபாயில் வசிக்கும் இந்திய சிறுமி : சர்வதேச குழந்தைகள் அமைதி விருதுக்கு தேர்வு. சர்வதேச குழந்தைகள் தினம் [ 20.11.2016 ] இன்று கொண்டாப்படுகிறது. இதை முன்னிட்டு 'கிட்ஸ் ரைட்ஸ்' என்ற சர்வதேச குழந்தைகள் உரிமை அமைப்பு, அமைதி விருதை வழங்கி வருகிறது. இவ்விருதை பெற உலகம் முழுவதிலும் இருந்து 120 பேர் விண்ணப்பித்திருந்தனர். இவர்களில் இருந்து 3 பேர் இந்த விருதுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் துபாயில் வசிக்கும் 16 வயது இந்திய சிறுமி கேஹாசன் பாசு. இவர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பிரசாரத்தை தனது 8வது வயதிலேயே தொடங்கியுள்ளார்.

- துபாயில் கழிவுகளை மறுசுழற்சி செய்யும் விழிப்புணர்வு பிரசாரத்தை நடத்தியுள்ளார். இதேபோல் தீவிரவாதத்துக்கு எதிராக பிரசாரம் மேற்கொண்ட கேமரூன் நாட்டைச் சேரந்த 12 வயது திவினா, சிரியாவைச் சேர்ந்த முசூன் அல்மெல்லான் ஆகியோரும் சர்வதேச குழந்தைகள் அமைதி விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான விருதுகளை கடந்த 2006ம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வென்ற முகமது யூனஸ் அடுத்த மாதம் 2ம் தேதி வழங்கவுள்ளார்.

146] "உலகிலே முதன்முறையாக வேதாரண்யத்தில் உவர்நீர் தாவர மரபணு தோட்டம் [ Tamil Nadu gets world's first salt-tolerant plant garden] இன்று [ 19.11.2016 ] தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. உவர்நீரில் வளரக் கூடிய புதிய தாவர வகைகளைக் கண்டறிய இந்த தோட்டம் முக்கிய ஆதாரமாகத் திகழும். மேலும், கடல் மட்டத்துக்கு கீழே விவசாயம் செய்வதற்கும், கல்வி ஆராய்ச்சிக்கும் இத்தோட்டம் பயனுள்ளதாக இருக்கும்.

* மொரிஷியஸ் குடியரசுத் தலைவர் பிபி அமீனா ஃபிர்டாஸ் குரிப் ஃபக்கிம் கலந்துகொண்டு, நாகை மாவட்டம், வேதாரண்யத்தில் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள உவர்நீர் தாவர மரபணு தோட்டத்தை வீடியோ கான்பரன்சிங் மூலம் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

147] உலக கழிவறை தினம் - 19.11.2016

* கருப்பொருள் : 'toilets and jobs'.

148] Mother Teresa Memorial International Award for Social Justice for 2016

* மும்பையைச் சேர்ந்த தன்னார்வ தொண்டு நிறுவனம் Harmony Foundation வழங்கும் அன்னை தெரேசா நினைவு சமூக நீதிக்கான சர்வதேச விருது ,
* டாக்கா காபி ஷாப் குண்டு வெடிப்பில் பலியான Faraaz Ayaaz Hossain மற்றும் ஐக்கிய அரபு எமிரேட் அரசின் வெளியுறவுத்துறை அமைச்சர் Sheikh Abdullah bin Zayed bin Sultan Al Nahyan ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

149] ரூபாய் நோட்டுகள் செல்லாது என அறிவிக்கப்பட்ட நிகழ்வில் பொது மக்களின் கருத்தை அறிய பிரதமர் அலுவலம் சார்பில் NM என்ற அலைபேசி செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

1 50] மத்திய விவசாயத்துறை அமைச்சகம் சார்பில் பறவைக் காய்ச்சல் பற்றி மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அறிவுறுத்த மற்றும் ஆராய அமைக்கப்பட்ட கமிட்டியின் தலைவர் -- திரு. முனியாலப்பா , இணை ஆணையாளர் , மத்திய கால்நடை , மீன் , மற்றும் பால்வளத்துறை .

151] மார்பக புற்றுநோய் தலைநகர்.

* கேரளா மாநிலத்தின் தலைநகர் திருவனந்தபுரம் , மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளோரை அதிகமாக கொண்டுள்ள இந்திய நகரமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
* இங்கு 1 லட்சம் பேருக்கு 40 பேர் என்ற அளவில் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
* தேசிய சராசரி என்பது 1 லட்சம் பேருக்கு 20 பேர் ஆகும். கேராளா மாநிலம் முழுமைக்கும் 1 லட்சம் பேருக்கு 14 பேர் என்ற அளவில் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

152] 4th Young Scientists Meet

- Institute of Nuclear Medicine and Allied Sciences (INMAS) மற்றும் DRDO இணைந்து நடத்திய 4வது இளம் அறிவியலாளர்கள் மாநாடு, புதுடெல்லியில் நவம்பர் 10 & 11ல் நடைபெற்று முடிந்துள்ளது.

- மாநாட்டின் கருப்பொருள் -- Convert Challenges into Opportunities

153] Smart India Hackathon 2017

- மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் சார்பில் Smart India Hackathon 2017 என்னும் மின்யுக தீர்வு போட்டி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- மத்திய அரசின் பல்வேறு துறைகள் தற்போது சந்தித்துவரும் பல்வேறு சிக்கல்கள் மற்றும் தடங்கல்கள் பற்றி mygov.in என்ற இணைய முகவரியில் அளிக்கப்பட்டு இருக்கும். இந்தியா முழுவதும் உள்ள கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்கள் குழு அதற்கான தீர்வுகளை முன்வைக்க வேண்டும். இது இந்தியா முழுவதும் 20 நகரங்களில் ஒரே நேரத்தில் நடைபெறும்.
- ஒரு கல்லூரியின் சார்பில் 3 குழுக்கள் வரை பங்கு பெறலாம். ஒரு குழுவில் 6 நபர்களுக்கு அனுமதிக்கப்படும், அவர்களில் பெண் ஒருவர் கண்டிப்பாக இடம்பெற வேண்டும்.

154] சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ( International Labour Organization ) டைரக்டர் ஜெனராலாக இங்கிலாந்தை சேர்ந்த Guy Ryder மீண்டும் தேர்வு பெற்றுள்ளார். இவரது பதவிக்காலம் 2012 முதல் 2017 உள்ளது. தற்போது 2017 அக்டோபர் முதல் 2022 வரை மீண்டும் தேர்வு பெற்றுள்ளார்.

155] 13th World Robot Olympiad

- 13வது ரோபோட் ஒலிம்பிக் போட்டி, நொய்டாவில் நவம்பர் 25 - 27 வரை நடைபெறுகிறது.
- இந்தியாவில் இப்போட்டி நடைபெறுவது இதுவே முதன்முறையாகும்.
- Theme -- Rap the Scrap
- 12வது போட்டி 2015ல் கத்தார் நாட்டின் தோஹா நகரில் நடைபெற்றது.

156] European Organisation for Nuclear Research (CERN)

- உலகின் மிகப்பெரிய அணுசக்தி மற்றும் துகள்கள் இயற்பியல் ஆராய்ச்சிக்கூடமான CERN எனப்படும் அணுஆராய்ச்சிக்கான ஐரோப்பிய அமைப்பில், இந்தியா கூட்டாளி அந்தஸ்து கொண்ட (

Associate Member ) இணை உறுப்பு நாடாகியுள்ளது. இதற்கான உடன்படிக்கையில் அணுசக்தி ஆணையத் தலைவரும், அணுசக்தித்துறை செயலருமான சேகர் பாஸூவும், CERN அமைப்பின் இயக்குநர் ஜென்ரல் டாக்டர் FABIOLA GIANOTTI-யும் மும்பையில் கையெழுத்திட்டனர்.

- இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் வரை இந்தியா இந்த அமைப்பில் பார்வையாளர் அந்தஸ்தில் ( Observer status ) இருந்தது.
- இந்த அமைப்பில் 22 நாடுகள் உறுப்பினராகவும், இந்தியாவையும் சேர்த்து 4 நாடுகள் இணை உறுப்பினராக உள்ளன.

157] ஜம்னாலால் பஜாஜ் விருது -- 2016

01) காந்தியின் கொள்கைகளை வெளிநாடுகளில் சிறப்பான முறையில் கடைபிடித்துவருவதற்காக துனிஷியா நாட்டின் Ennahda என்ற கட்சியின் தலைவர் -- Sheikh Rashid Ghannouchi

02) சமூக நல்லிணக்கத்திற்கு சிறப்பான பங்களிப்பை வழங்கியதற்காக -- Mohan Hirabhai Hiralal

03) பெண்கள் மற்றும் குழந்தைகளின் நல்வாழ்வுக்கு சிறப்பான சேவை செய்ததற்காக -- Dr. Nannapaneni Manga Devi

04) அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை கிராமப்புற வளர்ச்சிக்கு பயன்படுத்தியதற்காக -- Bonbehari Vishnu Nimbkar. ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

158] ஜெர்மனி அரசின் கல்வி மற்றும் ஆராய்ச்சிதுறையின் சார்பில் வழங்கப்படும் German Green Talent விருது இந்தியாவைச் சேர்ந்த ஷாமிக் சௌதுரி ( Shamik Chowdhury) உட்பட 25 நபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

159] Press Council of India (PCI) ராஜாராம் மோகன் ராய் விருது S. நிகல் சிங்கிற்கு வழங்கப்பட்டுள்ளது.

160] ஒடிஷா மாநிலம் , Ganjam மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் டைட்டானியம் உற்பத்தி ஆலை , தனது சோதனை உற்பத்தியை துவக்கியுள்ளது. ( இந்தியாவின் முதல் Titanium Sponge உற்பத்தி ஆலை கேரளாவில் Chavara வில் ISRO சார்பில் அமைக்கப்பட்டுள்ளது.)

161] 1st International Agrobiodiversity Congress புதுடெல்லியில் நவம்பர் 06 - 09 வரை நடைபெற்றுள்ளது.

162] சுவிட்சர்லாந்து நாட்டின் சுற்றுலா துறை தூதராக பாலிவுட் நடிகர் ரன்பீர் கபீர் நியமிக்கப்பட்டுள்ளார்.

163] துபாயில் அமைந்துள்ள Consul General of India அலுவலகத்தில் காந்தி சிலை நிறுவப்பட்டுள்ளது.

164] International Competition Network அமைப்பின் வருடாந்திர மாநாடு 2018ல் இந்தியாவில் நடைபெறவுள்ளது.

2017 - ஹாங்காங்

2016 - சிங்கப்பூர்

165] International Press Freedom Award - 2016 நக்சல் பாதித்த Bastarல் நடைபெற்ற மனித உரிமை மீறல்களை வெளிக்கொணர்ந்த மாலினி சுப்ரமணியம்., எல் சல்வடாரின் Oscar Martinez ., துருக்கியின் Can Dundar மற்றும் 2013 முதல் சிறையில் வாடும் எகிப்து புகைப்பட கலைஞர் Abou Zeid ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

166] 14th Pravasi Bharatiya Divas (PBD) Convention. 14வது வெளிநாடுவாழ் இந்தியர்கள் தின மாநாடு 2017 ஜனவரி 07 - 09 வரை பெங்களூருவில் நடைபெறுகிறது. இந்த விழாவின் சிறப்பு விருந்தினராக போர்சுகல் நாட்டின் பிரதமர் António Costa கலந்து கொள்கிறார்.

167] பாசுமதி மற்றும் இதரவகை அரிசிகளை இந்தியாவின் 17 ஆலைகளில் இருந்து இறக்குமதி செய்ய சீனா ஒப்புக்கொண்டுள்ளது. சீனா இதுவரை தாய்லாந்து மற்றும் பாகிஸ்தானில் இருந்து மட்டுமே பெருமளவு அரிசி இறக்குமதி செய்து வருகிறது.

168] மாவட்ட கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு கடன் வழங்க நபார்டு வங்கி 21000 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளது.

169] paytm போன்ற மின்யுக பரிமாற்றத்தில் ரூ.20,000 வரை பணப்பரிமாற்றம் செய்ய ரிசர்வ் வங்கி அனுமதி அளித்துள்ளது. ( டிசம்பர் 30 வரை )

170] 70 Saal Azadi - Zara Yaad Karo Kurbani' ( 70 years of independence : Do recall the sacrifices )

* கோவாவில் நடைபெற்ற 47வது சர்வதேச திரைப்பட விழாவினை முன்னிட்டு 70 Saal Azadi - Zara Yaad Karo Kurbani ( 70 ஆண்டுகள் சுதந்திரம் -- தியாகங்களை நினைவு கூறுவோம் ) என்ற கருப்பொருளை அடிப்படையாக கொண்ட Multimedia கண்காட்சியை செய்தி மற்றும் ஒளிபரப்பு துறை அமைச்சர் வெங்கய்யா நாயுடு துவக்கி வைத்துள்ளார்.

171] நவிமும்பை மாநகராட்சி சார்பில் துவங்கப்பட்டுள்ள " தூய்மை நவிமும்பை " திட்டத்தின் பிரசார தூதராக பிரபல பிண்ணனி பாடகர் ¶ சங்கர் மகாதேவன் ¶ நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

172] அமெரிக்காவில் 'ஜியோபார்டி டீன் டோர்னமெண்ட்' என்ற பெயரில் தொலைகாட்சியில் ஆண்டுதோறும் நடத்துகிற வினாடி வினா போட்டியில் மேடிசன் நகரில் வசிக்கும் இந்திய வம்சாவளி மாணவர் சரத் நாராயண் 1 லட்சம் டாலரை (சுமார் ரூ.67 லட்சம்) வெற்றுள்ளார்.

173] ஐ.நா.வுக்கான அடுத்த அமெரிக்கத் தூதராக நியமிக்க, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தெற்கு கரோலினா மாகாண பெண் ஆளுநர் நிக்கி ஹேலியை அதிபர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்டு டிரம்ப் முடிவு செய்துள்ளார்.

* 44 வயதாகும் நிக்கி ஹேலி, இந்தியாவிலிருந்து குடியேறிய பெற்றோருக்குப் பிறந்தவர். இனரீதியிலான மோதல்கள் அதிகம் நடைபெறும் தெற்கு கரோலினா மாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் கவர்னர் என்ற பெருமையுடன், அந்தப் பதவியை வகிக்கும் முதல்

சிறுபான்மை இனத்தவர் என்பதும் நிக்கி ஹேலியின் சிறப்பம்சமாகும். இரண்டாவது முறையாக அந்த மாகாணத்தின் ஆளுநராக அவர் பொறுப்பு வகித்து வருகிறார்.

174] நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே உள்ளது வெலிங்டன் கன்டோன்மென்ட் வாரியம். ராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த வாரியத்தின் உள்ளாட்சி நிர்வாகத்தை எளிமைப்படுத்த வரி செலுத்துதல் உள்ளிட்ட சேவைகளுக்கு CANTONMENT BOARD WELLINGTON என்ற அலைபேசி ‘செயலி’யை அறிமுகப்படுத்தியுள்ளது.

175] மத்திய பணியாளர் தேர்வு வாரியம் ( UPSC ) தனது நீண்ட , நெடிய வரலாற்று ஆவணங்களை ( 1916 முதல் நடத்தி வரும் தேர்வுகள் பற்றிய ) பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தும் விதமாக புதுடெல்லியில் அருங்காட்சியம் அமைத்துள்ளது.

176] QS Graduate  Employ ability Rankings

* சிறந்த வேலைவாய்ப்பை வழங்கும் கல்வி நிறுவனங்கள் பற்றிய பட்டியலை QS நிறுவனம் வெளியிட்டுள்ளது.

- இதில் இந்தியாவின் காரக்பூர் IIT 84வது இடம் பெற்றுள்ளது.
- IIT மும்பை 100 இடங்களுக்குள்ளும் , IIT சென்னை, IIT டெல்லி , டில்லி பல்கலை ஆகியவை 200க்குள்ளும் இடம் பெற்றுள்ளன.

177] இரண்டாம் உலகப்போருக்குப் பின் ஜப்பான் அரசு , முதன்முறையாக ஐ.நா. அமைதிப்படைக்கு ( தெற்கு சூடானுக்கு ) படை வீரர்களை அனுப்பியுள்ளது.

178] அம்மா மலிவு விலை உணவகங்கள் போன்று ராஜஸ்தான் மாநில அரசு Annapurna Rasoi Programme என்ற திட்டத்தை துவக்கியுள்ளது.

179] உலகின் புகழ்பெற்ற மெழுகு சிலை அருங்காட்சியகமான Madame Tussauds தனது 22வது கிளையை டெல்லியில் 2017ல் துவக்குகிறது.

180] அமெரிக்காவின் உள்நாட்டு பாதுகாப்பு, உலக அமைதி, கலை, விளையாட்டு மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் ஆற்றும் சேவைகளை கவுரவிக்கும் வகையில் ஆண்டுதோறும் 'மெடல் ஆப் ஃப்ரீடம்' (சுதந்திர பதக்கம்) என்ற உயரிய விருது வழங்கப்படுகிறது.

- உலகம் முழுவதும் போலியோ நோயை ஒழிப்பதற்காக சேவை புரிந்த பிரபல கம்ப்யூட்டர் மென்பொருள் தயாரிப்பு நிறுவனத்தின் தலைவரான பில் கேட்ஸ் மற்றும் அவரது மனைவி மெலின்டா கேட்ஸ் , முன்னாள் கூடைப்பந்து வீரர்கள் மைக்கேல் ஜோர்டான், கரிம் அப்துல் ஜப்பார், நடிகர்கள் டாம் ஹான்க்ஸ், ராபர்ட் டி நீரோ மற்றும் ராபர்ட் ரெட்ஃபோர்ட்ராக்ஸ்டார் இசைக்குழுவை சேர்ந்த புருஸ் ஸ்பிரிங்ஸ்டீன், பாடகி டயானா ராஸ், தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளர் எல்லென் டிஜெனெரெஸ்.

- அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசாவின் சந்திர ஆராய்ச்சிக்கு துணையாக இருந்த கம்ப்யூட்டர் அறிவியலாளர் மார்கரெட் ஹாமில்டன், அமெரிக்கர்கள் சமுதாயத்தின் மூத்த தலைவர் எலோயிஸ் கோபெல் ஆகியோருக்கு ஒபாமா விருதுகளை அளித்து கவுரவித்தார்.

181] 2017 Climate Change Performance Index (CCPI).

- ஜெர்மனியைச் சேர்ந்த Green Watch என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் , 58 நாடுகள் மேற்கொண்ட பருவநிலை மாற்ற நடவடிக்கைகளின் படி அவைகளை பட்டியலிட்டுள்ளது.

- இந்தியா இந்த பட்டியலில் 20வது இடத்தில் உள்ளது. முதல் 3 இடங்கள் காலியாக உள்ளது. பிரான்ஸ் - 4 ., சுவிடன்- 5, பிரிட்டன் - 6 இடங்களில் உள்ளன.

182] முன்னாள் முதல்வர் M.G.R. அவர்களின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை நிர்வாகம் செய்ய முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி D. ஹரிபரந்தாமனை நியமனம் செய்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

183] பணப் புழக்கமே இல்லாமல், டிஜிட்டல் முறையிலேயே அனைத்து பணப் பரிவர்த்தனைகளையும் செய்யும் வகையில் 2019ம் ஆண்டு முதல் டிஜிட்டல் கரன்சியை வெளியிட்டு உலகிலேயே முதல் நாடாக ஸ்வீடன் சாதனை படைக்க உள்ளது.

* ஸ்வீடன் நாட்டின் பணத்தை எக்ரோன் என்று அழைப்பார்கள். தற்போது, ஸ்வீடன் நாட்டில் 80 சதவீத பணப் பரிவர்த்தனை இணையதளம் மூலமாகவும், செல்போன் ஆப்கள் மூலமாகவும் தான் நடக்கின்றன.

◆ 1660ம் ஆண்டு உலகிலேயே முதல் முறையாக காகிதத்தால் ஆன பண நோட்டுகளை அறிமுகப்படுத்தியதே ஸ்வீடனின் ரிக்ஸ் வங்கிதான் என்பது குறிப்பிடத்தக்கது. ◆

184] வங்காள விரிகுடாவின் கிருஷ்ணா - கோதாவரி (கே.ஜி.) படுகையில் ஓ.என்.ஜி.சி.க்கு சொந்தமான எண்ணெய் - எரிவாயு வயல்கள் உள்ளன.

- அங்கு ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் ஊடுருவி ஏழு ஆண்டுகளாக இயற்கை எரிவாயுவை எடுத்து விற்பனை செய்ததாகப் புகார் எழுந்தது.
- இந்த புகார் பற்றி ஆராய தில்லி உயர் நீதிமன்ற உத்தரவின் பேரில் அமைக்கப்பட்ட விசாரணை கமிசன் தலைவர் -- நீதிபதி ஷா
- கடந்த 2009-ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ஆம் தேதி முதல், 2015-ஆம் ஆண்டு மார்ச் 31-ஆம் தேதி வரை 1,100 கன மீட்டர் அளவிலான எரிவாயுவை ரிலையன்ஸ் நிறுவனம் எடுத்து விற்பனை செய்துள்ளது. அந்த நிறுவனம் அவ்வாறு எடுத்து விற்பனை செய்த எரிவாயுவின் மதிப்பு ரூ. 11 ஆயிரம் கோடி ( 155 கோடி டாலர் ) என விசாரணை ஆணையம் அறிக்கை தாக்கல் செய்துள்ளது.

- இது தவிரவும் தனது எரிவாயு படுகையில் குறைவான எரிவாயு எடுத்ததற்காக ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திற்கு 17.49 கோடி டாலர் ( 1220 கோடி ரூபாய்) அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

185] ¶ நிறுத்துடா ¶

⁎ சர்வதேச பெண்களுக்கு எதிராக குற்றங்களைத் தடுத்தல் தினத்தை முன்னிட்டு லாப நோக்கற்ற அமைப்பான " கருணாலயா " தொண்டு அமைப்பின் சார்பில் பெண்களுக்கு எதிரான வன்முறையை தடுப்பது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி உருவாக்கப்பட்டுள்ளது.

- அந்த நிகழ்ச்சியின் முழக்கம் – நிறுத்துடா

186] ஜூனியர் உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டி வரும் டிசம்பர் 8 முதல் 18 வரை உத்தரப் பிரதேச தலைநகர் லக்னௌவில் நடைபெறுகிறது.

- இதில் பங்கேற்கவுள்ள இந்திய அணியின் கேப்டனாக ஹர்ஜீத் சிங்கும், துணை கேப்டனாக திப்சன் திர்கேவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

187] தெலுங்கானா மாநில முதல்வரின் அதிகாரபூர்வ இல்லம், ஹைதராபாத் நகரின் பேகம்பேட் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ளது.

- முதலமைச்சரின் அதிகாரப்பூர்வ இல்லத்திற்கு, பிரகதி பவன் என்று பெயரிடப்பட்டுள்ளது.
- முதல்வரின் புதிய வீடு மற்றும் அலுவலகம் இணைந்த பங்களா கட்டப்பட்டுள்ள நிலத்தின் அளவு 8.9 ஏக்கர் ஆகும்.
- தரைத் தளம் மற்றும் ஒரு தளத்துடன் கூடிய ஒவ்வொரு கட்டடமும் தலா 40 ஆயிரம் சதுர அடி கொண்டவை.
- கட்டுமான செலவு -- சுமார் 40 கோடி
- மும்பையைச் சேர்ந்த பிரபல கட்டுமான நிறுவனமான, ஷபூர்ஜி பலோன்ஜி, புதிய அலுவலகம், வீட்டைக் கட்டியது. இது, டாடா நிறுவனத் தலைமைப் பொறுப்பில் இருந்து வெளியேற்றப்பட்ட சைரஸ் மிஸ்திரியின் குடும்பத்துக்கு சொந்தமான நிறுவனம்.

188] ஆஸ்திரேலியாவின் புகழ் பெற்ற ஆராய்ச்சிப் பல்கலைக் கழகமான நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகம் உலகின் மிகப் பெரிய குவாண்டம் கணினியை உருவாக்கியிருக்கிறது.

- சிலிக்கான் கொண்டு செய்யப்பட்ட இந்தக் கணினி இன்றைய கணினிகள் போல் அல்லாமல் குவாண்டம் கணித்தல் முறையில் '0' மற்றும் '1' என்கிற இரட்டை எண்களை வேறு விதமாகப் பயன்படுத்துகிறது. கியூபிட் (Qubit) எனப்படும் குவாண்டம் கணித்தல் முறையில் '0' அல்லது '1' என்பதுடன் '0' மற்றும் '1' ஆகியவற்றின் இரு நிலை இருப்பும் (Superposition) செயல்படும். இதன் மூலம் லட்சக்கணக்கான வருடங்களில் செய்யக்கூடிய கணினி பிராசஸிங்கைச் சில தினங்களில் முடித்துவிட முடியும்.

¶ நியூ சவுத் வேல்ஸின் பிற பெருமைகள் ¶

- 2012-ல் சிலிக்கானில் பதிக்கப்பட்ட ஒற்றை பாஸ்ஃபரஸ் அணுவின் எலெக்ட்ரான் ஒன்றின் சுழற்சியைக் கொண்டு முதல் கியூபிட்டை உருவாக்கியது.
- 2012-ல் உலகின் முதல் ஒற்றை அணு டிரான்ஸிஸ்டரை உருவாக்கியது.
- 2015-ல் சிலிகானால் செய்யப்பட்ட முதல் குவாண்டம் லாஜிக் கேட்.

189] மைக்கேல் ஜாக்ஸனின் கை வண்ணத்தில் எட்டாவது படைப்பாக 1991ம் ஆண்டு நவம்பர் 26ம் தேதி வெளியானது 'டேஞ்சரஸ்' எனும் ஆல்பம்.

- மொத்தம் 14 பாடல்களைக் கொண்ட இந்த ஆல்பத்துக்கு இந்த ஆண்டு 25 வயது.

- இதையொட்டி சமீபத்தில் M. J . - The Genius Of Michael Jackson எனும் புத்தகம் வெளியாகியுள்ளது.

- 'ரோலிங் ஸ்டோன்' எனும் இசைத் துறை தொடர்பான பிரபல பத்திரிகையில் செய்தியாளராகப் பணியாற்றும் ஸ்டீவ் நாப்பர் என்பவர் இந்த புத்தகத்தை எழுதியுள்ளார்.

190] **More News Is Good News**

* NDTV தொலைக்காட்சியின் செய்தி ஆசிரியர் குழுவை சேர்ந்த ஆயிஷா ககல் இந்த புத்தகத்தை தொகுத்துள்ளார்.

191] ஹைதராபாதைச் சேர்ந்த மென்பொறியாளரான சையது காலீத் சைபுல்லா என்பவர், இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் முஸ்லிம்களின் பங்களிப்பை அறிந்து கொள்ள 'முஸ்லிம் ஃப்ரீடம் ஃபைட்டர்ஸ்' (Muslim Freedom Fighters) எனும் செயலியை உருவாக்கியுள்ளார்.

192] நாளந்தா பல்கலைக்கழக துணை வேந்தராக பதவி வகிக்கும் ஜார்ஜ் இயோ ( முன்னாள் சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர் ) தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

- இவருக்கு முன் இப்பதவியில் இருந்தவர் - அமர்தியா சென்

193] 2016ம் ஆண்டுக்கான உலகின் செல்வாக்கு மிக்க 100 பெண்களின் பட்டியலில் , கர்நாடகா மாநிலம், ராம்நகர் மாவட்டம் குனிகல் கிராமத்தை சேர்ந்த 105 வயதான " சாலுமரத " திம்மக்கா இடம் பெற்றுள்ளார்.

* சாலுமரத என்றால் வரிசையாக நட்ட ஆலமரம் என பொருள்படும்.

இந்த பட்டியலில் மேலும் 3 இந்திய பெண்கள் இடம்பெற்றுள்ளனர்.

1) தமிழ்நாட்டை சேர்ந்த மல்லிகா ஸ்ரீநிவாசன் , டஃபே எனும் டிராக்டர் நிறுவனத்தில் தலைமை நிர்வாக இயக்குநர்.

2) மகாராஷ்டிரா மாநிலம் சங்லியை சேர்ந்த கௌரி சிந்தார்கர் 20 வயதாகும் கம்ப்யூட்டர் என்ஜினியரிங் மாணவி. தற்போது "ஸ்கூல் இன் த குளவ்டு" ( School in the Cloud ) என்று அழைக்கப்படும் தனித்துவ கல்வி முறையை இந்தியாவில் பயின்ற முதல் பெண் இவர்.

3) எழுத்தாளரும், நடிகையுமான நேஹா சிங் மும்பையில் பெண்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் வன்முறைகளுக்கு எதிராக இயக்கம் ஒன்றை தொடங்கியுள்ளார்.

* [ கனடாவில் பிறந்து தற்போது பாலிவுட்டில் கலைச்சேவை புரிந்து வரும் ¶ சன்னி லியோனும் ¶ இந்த பட்டியலில் இடம் பெற்றுள்ளார். ]

194] www.epashuhaat.gov.in

* விவசாயிகள் மற்றும் விவசாயத்துறை தொழில் முனைவோரை பால் மற்றும் அது சார்ந்த தொழிலில் ஈடுபடுத்தும் நோக்கில் மத்திய அரசு " இபசுஹாட் " என்ற இணைய தளத்தை துவக்கவுள்ளது.

195] ஹாக்கி இந்தியா அமைப்பின் தலைவராக பதவி வகித்து வந்த நரிந்தர் பாத்ரா சர்வதேச ஹாக்கி சம்மேளன தலைவராக பதவியேற்றுள்ளதால், ஹாக்கி இந்தியா அமைப்பின் புதிய தலைவராக மரியம்மா கோஷி பொறுப்பேற்றுள்ளார்.

196] அமெரிக்காவுக்கு சிம்மசொப்பனமாக விளங்கிய கியூபாவின் முன்னாள் அதிபர் ஃபிடல் காஸ்ட்ரோ , வயது முதிர்வு காரணமாக தனது 90வது வயதில் ( நவம்பர் 26 / 2016ல் ) இயற்கை மரணம் எய்தினார்.

- 1959 முதல் 1976 வரை அந்நாட்டின் பிரதமராகவும், 1976 முதல் 2008 வரை அதிபராகவும் இருந்தவர். 49 ஆண்டுகள் கியூபாவை ஆட்சி செய்தவர், 2008-ல் பதவியிலிருந்து விலகினார். நீண்ட காலம் ஒரு நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருந்த தலைவர் என்ற பெருமைகுரியவர் ஃபிடல் காஸ்ட்ரோ.

197] பின்லாந்து அரசு , நிலக்கரி மூலம் மின்உற்பத்தி செய்வதை 2030க்குள் முற்றிலும் நிறுத்தப்படும் என அறிவித்துள்ளது.

198] விமான போக்குவரத்துதுறை , விமானங்களின் பயண செயல்பாடுகளை உடனடியாக அறிந்து கொள்ள Airsewa என்ற அலைபேசி செயலியையும் , வலைத்தளத்தையும் துவங்கியுள்ளது.

199] உ.பி. மாநில சுற்றுலாத்துறை ஆக்ராவில் நவம்பர் 25 - 30 வரை தாஜ் பலூன் திருவிழாவை { Taj Balloon Festival 2016 } ஏற்பாடு செய்துள்ளது.

200] டெபிட் கார்டு மூலம் பொதுமக்களுக்கு 2000 ரூபாய் பணம் வழங்க Big Bazar மற்றும் Inox Leisure ஆகியவை SBI வங்கியுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

201] ராணுவ முகாம்களில் உள்ள வீரர்கள் பழைய 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுக்களை மாற்ற ICICI வங்கி , ராணுவ முகாம்களிலேயே சிறப்பு கவுண்டர்களை ஏற்பாடு செய்துள்ளது.

202] சர்வதேச அமச்சூர் குத்துச்சண்டை அமைப்பு இந்தியாவின் மேரி கோமுக்கு Legends Award வழங்கி சிறப்பித்துள்ளது.

203] ரொக்க பண பரிமாற்றத்தை தவிர்த்து மின்னனு பணப்பரிமாற்றத்தை ஊக்கவிக்க செய்யவேண்டிய வழிமுறைகள் பற்றி ஆராய நிதி ஆயோக் தலைமை செயல் அதிகாரி ( CEO ) அமிதாப் காந்த் தலைமையிலான கமிட்டி நியமனம் செய்யப்பட்டுள்ளது.

204] குத்துச்சண்டை வீராங்கனை சரிதா தேவியின் வாழ்க்கை வரலாற்று நூல் Shadow Fighter : Sarita Devi and Her Extraordinary Journey எழுதியவர் --- சுப்ரிதா தாஸ்

205] ஜூலை 2016 வரை இந்தியாவில் 2,15,000 ATMகள் உள்ளன. 5800 நபர்களுக்கு ஒரு ATM என்ற அளவில் உள்ளது.

- ஒரு லட்சம் பேருக்கு 184.7 ATMகள் ரஷ்யாவில் உள்ளன. இங்கிலாந்தில் 129.76, பிரேசில் 129.25., சீனாவில் 55.03 என்ற அளவில் உள்ளன. ஆனால் இந்தியாவில் ஒரு லட்சம் பேருக்கு 18.07 ATMகள் மட்டுமே உள்ளன.
- இந்திய அளவில் தலைநகர் டெல்லியில் ஒரு லட்சம் பேருக்கு 43.44 ATMகள் உள்ளது. கோவாவில் 51.83 ATMகளும் , தமிழ்நாட்டில் 34.31 ATMகளும், ஜார்கண்டில் 11.13 ATMகளும் உள்ளன. உ.பி மற்றும் பீகாரில் ஒரு லட்சம் பேருக்கு தலா 8.87 & 7.74 ATMகள் மட்டுமே உள்ளன.

- மக்கள் தொகை அதிகம் உள்ள மாநிலங்களில் தமிழ்நாட்டில் மிக அதிகளவு ATMகள் உள்ளன.

206] ஹாங்காங் ஓபன் பேட்மிண்டன் தொடரின் இறுதிப்போட்டியில் சீன தைபே வீராங்கனை டாங் சூ யிங்யிடம் இந்திய வீராங்கனை பிவி சிந்து தோல்வியடைந்தார்.

- இந்தியா சார்பாக ரியோ ஒலிம்பிக் போட்டியில்முதல் முறையாக வெள்ளி பதக்கம் வென்று சாதனை படைத்த சிந்து, அண்மையில் நடந்து முடிந்த சீன ஓபன் சூப்பர் சீரிஸ் போட்டியிலும் முதல்முறையாக பட்டம் வென்றுள்ளார்.

207] சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) அமலாக்கத்தால் மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுசெய்வதற்காக, ஒவ்வொரு காலாண்டுக்கு ஒருமுறை மத்திய அரசு இழப்பீடு வழங்கும் என்று ஜிஎஸ்டி இழப்பீடு வரைவுச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- ஒரு மாநிலத்துக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை அதிகப்படியாக இருப்பது சிஏஜி தணிக்கையில் தெரியவந்தால், அதற்கேற்ப அடுத்த ஆண்டில் அம்மாநிலத்துக்கான இழப்பீட்டுத் தொகை திருத்தியமைக்கப்படும்.

- ஜிஎஸ்டி வரியை 5, 12, 18, 28 சதவீதம் என 4 அடுக்கு முறையில் அமல்படுத்தவும், ஆடம்பர பொருள்களுக்கு அதிகப்படியான வரியை விதிக்கவும் ஜிஎஸ்டி கவுன்சில் ஏற்கெனவே முடிவு செய்துள்ளது.

208] பிரபல ஹாலிவுட் நடிகர் ஸ்டீவன் ஸீகாலுக்கு ரஷ்யா குடியுரிமை வழங்கியுள்ளது.

- ஸ்டீவன் ஸீகாலின் தந்தை ரஷியாவிலிருந்து அமெரிக்காவுக்கு குடியேறியவர். ஸ்டீவன் ஸீகால் அமெரிக்காவில் பிறந்து இயற்கையாக அந்த நாட்டின் குடியுரிமை பெற்றவர்.

- அமெரிக்காவின் பிரபல சண்டை வீரர்களான ராய் ஜோன்ஸ் ஜூனியர், ஜெஃப் மான்சன் உள்ளிட்டோரும் சமீபத்தில் ரஷிய குடியுரிமை பெற்றுள்ளனர்.

209] AIBA Youth World Championships

- ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்பர்க்கில் நடைபெற்ற உலக இளையோர் குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் சச்சின் சிங் , கியூபா வீரர் ஜார்ஜ் கிரினனை தோற்கடித்து தங்கப்பதக்கம் வென்றுள்ளார். இந்த போட்டிகளில் தங்கம் வென்ற மூன்றாவது இந்தியர் இவர்.
- சச்சின் சிங் ஏற்கனவே உலக ஜூனியர் குத்துச்சண்டை போட்டியில் வெண்கலம் வென்றுள்ளார்.

210] புதிய இந்திய ரூபாய் நோட்டுகளான ரூ.500, ரூ.2000 ஆகியவை செல்லாது என்று நேபாள ராஷ்ட்ரிய வங்கி (NRB) அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

[ அன்னியச் செலாவணி மேலாண்மைச் சட்டத்தின் கீழ் இந்தியா அதிகாரபூர்வ அறிவிக்கை அளித்தால் மட்டுமே நேபாளத்தில் புதிய ரூ.500, ரூ.2000 செல்லும் என்று நேபாள் ராஷ்ட்ரிய வங்கி கூறியுள்ளது. ]

211] AP Purse app

- பணமில்லா வர்த்தகத்தை ஊக்குவிக்கும் பொருட்டு ஆந்திர அரசு AP Purse எனும் அலைபேசி செயலியை உருவாக்கியுள்ளது. இதன் மூலம் பல்வேறு அரசு துறைகளுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை செலுத்தலாம்.
- இந்த செயலி விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு வர உள்ளதாக அம்மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு அறிவித்துள்ளார்.

212] 1971ல் நடைபெற்ற பங்களாதேஷ் விடுதலைப் போரில் வீரமரணம் எய்திய 1668 இந்திய வீரர்களை கவுரவிக்கும் பொருட்டு அவர்களுக்கு பங்களாதேஷில் நினைவுச்சின்னம் எழுப்பப்படுப் என அந்நாட்டு பிரதமர் ஷேக் ஹசீனா அறிவித்துள்ளார்.

* மேலும் அவர்களின் குடும்பத்திற்கு ரூ. 5 லட்சம் பணம் வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

213] 2016 தகவல் மற்றும் தொலைதொடர்பு தொழில்நுட்ப வளர்ச்சி குறியீட்டில் ( Information and communication technology (ICT) development index - 2016 ) இந்தியா 138வது இடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு 135வது இடம்.

- முதல் 5 இடங்கள் ---- South Korea (1st), Iceland (2nd), Denmark (3rd), Switzerland (4th) and United Kingdom (5th).

* கடைசி 5 இடங்கள் --- Niger (175), Chad (174), Guinea-Bissau (173), South Sudan (172) and Burundi (171).

214] பொதுமக்கள் தங்கள் அருகில் உள்ள காவல்நிலையம் மற்றும் காவல் கட்டுப்பாடு அறை ஆகியவை பற்றி அறிந்து கொள்ள 'Indian Police at Your Call' என்ற அலைபேசி செயலியை பிரதமர் அறிமுகம் செய்துள்ளார்.

215] அஸ்ஸாம் மாநிலம் Haflong நகரில் டிசம்பர் 18 - 20 வரை Dimasa பழங்குடியினரின் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையிலான Judima எனும் விளையாட்டு மற்றும் கலாசார திருவிழா நடைபெற உள்ளது.

216] முதலாவது கத்தார் லேடிஸ் ஓபன் கோல்ப் போட்டியில் இந்திய வீராங்கனை அதிதி அசோக் பட்டம் வென்றுள்ளார்.

217] இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களுக்கான பயிற்சி மையம் Lal Bahadur Shastri National Academy of Administration (LBSNAA) இயக்குநராக முதல் முறையாக Upma Chowdhary என்ற பெண் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

218] பாகிஸ்தானின் புதிய ராணுவ தலைமை தளபதியாக Qamar Javed Bajwa நியமிக்கப்பட்டுள்ளார்.

219] அமிதாப்பச்சன் நடிப்பில் உருவான, பெண்களுக்கு எதிரான வன்முறைகளை சித்தரித்த Pink திரைப்படம் ஐ.நா.தலைமையகத்தில் திரையிடப்படவுள்ளது.

220] அந்தமான் நிகோபர் தீவுகள் மற்றும் பல்வேறு தொலைதூர தீவுகளுக்கு இந்திய ராணுவ வீரர்களையும் , ராணுவ தளவாடங்களையும் கொண்டு செல்வதற்கான Landing Craft Utility (LCU) L-57 கப்பல் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளது.

221] குரோஷியா தலைநகர் ஸாகிரெபில் நடந்த டேவிஸ் கோப்பை டென்னிஸ் இறுதிப் போட்டியில், அர்ஜென்டினா அணி குரோஷியாவை 3 - 2 என்ற போட்டி கணக்கில் வென்று முதல் முறையாக கோப்பையை கைப்பற்றியது.

- ஏற்கனவே 4 முறை பைனலுக்கு முன்னேறி தோற்றிருந்த அர்ஜென்டினா முதல் முறையாக டேவிஸ் கோப்பையை கைப்பற்றி உள்ளது. குரோஷியா அணி 2005ல் சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.

222] ராணுவ நடவடிக்கைகளுக்கான இயக்குநர் ஜெனரலாக ஏ.கே.பாட் நியமிக்கப்பட்டுள்ளார். எல்லை நடவடிக்கைகளையும் இவர் கவனிப்பார்.

223] தென் மண்டல தொழில் பழகுநர் வாரிய தலைவராக, ஃபவுண்டரிஸ் வளர்ச்சி நிறுவன தலைவர் சி.ஆர்.சுவாமிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர், 3 ஆண்டுகள் இந்த பதவி வகிப்பார்.

224] சைக்கிள் நெடுஞ்சாலை

- இந்தியாவிலேயே முதன்மையாக உ.பி.யில் எடாவா நகர் முதல் ஆக்ரா வரை 207 கி.மீ. தூரத்திற்கு 7அடி அகலத்திற்கு சைக்கிள் மட்டும் செல்வதற்கான நெடுஞ்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

225] World War II Vintage Jeep Rally

- மணிப்பூர் மாநிலம் Koirengeil இரண்டாம் உலகப்போரில் பங்குபெற்ற பழமையான ஜீப்களின் அணிவகுப்பு நடைபெற்றுள்ளது. இவற்றோறோடு பைக்குகளும் கலந்து கொண்டுள்ளன.

226] டிசம்பர் 31-ம்தேதி முதல் இந்தியாவின் முதல் பண பரிமாற்றம் இல்லாத மாநிலமாக கோவா மாநிலம் மாறவுள்ளது.

* அரசிடம் பதிவு பெற்ற வியாபாரிகள் ஒவ்வொருவருக்கும் வங்கியிடமிருந்து எம்எம்ஐடி கோடு ஒன்று அளிக்கப்படும்.

- இதற்கு மக்கள் ஸ்மார்ட்போன்கள் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. மாறாக *99# என்ற எண்ணிற்கு போன் செய்து சில வழிமுறைகளைப் பின்பற்றினால், சம்பந்தப்பட்டவர்களின் வங்கிக்கணக்கிலிருந்து பணம் எடுத்துக் கொள்ளப்படும். மக்கள் பொருட்கள் வாங்கும்போது இந்த எம்.எம்.ஐ.டி கோடைப் பயன்படுத்தி பணம் செலுத்தலாம்.
- இந்தத் திட்டத்தின் மூலம் காய்கறி, மளிகை பொருட்கள் தொடங்கி ஆப்பிள் ஐ-போன்கள் வரை ரொக்கமில்லாமல் மின்னணு பரிவர்த்தனைகள் மூலம்தான் வாங்க முடியும்.

227] 2011-ஆம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில் உள்ள மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் 10 கோடியே 45 லட்சத்து 45 ஆயிரத்து 716 பழங்குடியினர் வசித்து வருகின்றனர்.

- இதில் தமிழகத்தில் 7 லட்சத்து 94 ஆயிரத்து 697 பேரும், ஆந்திர மாநிலத்தில் 26 லட்சத்து 31 ஆயிரத்து 145 பேரும், கர்நாடகாவில் 42 லட்சத்து 48 ஆயிரத்து 987 பேரும், கேரளாவில் 4 லட்சத்து 84 ஆயிரத்து 839 பேரும் உள்ளனர்.

  மக்களவையில் மத்திய பழங்குடியினர் விவகாரங்கள் துறை இணை அமைச்சர் ஜஸ்வன்ட் சின் சுமன்பாய் பபோர் அளித்துள்ள புள்ளி விபரங்கள் இவை.

228] தாய்லாந்தின் புதிய மன்னராக பட்டத்து இளவரசர் மஹா வஜ்ஜிரலோங்கோர்ன் பதவியேற்றுக் கொண்டதாக அந்நாட்டு நாடாளுமன்றம் அறிவித்துள்ளது.

- அந்நாட்டின் மன்னராக இருந்த பூமிபால் அதுல்யதேஜ், தனது 88-ஆம் வயதில், அக்டோபர் 13-ஆம் தேதியன்று மரணமடைந்தார்.

229] கருப்புப் பணத்தை வெளிக்கொணர்வதற்கான மத்திய அரசின் அடுத்தகட்ட நடவடிக்கையாகயாகவும், ரூபாய் நோட்டு தட்டுப்பாட்டை போக்குவதற்கு உரிய ஆலோசனைகளை வழங்குவதற்காக 5 மாநில முதல்வர்கள் கொண்ட குழு அமைக்கப்பட உள்ளது.

குழு தலைவர் --- ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு.

உறுப்பினர்கள்

1) பீகார் முதல்வர் நிதிஷ் குமார்
2) கர்நாடகா முதல்வர் சித்தராமையா
3) மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர பட்னவிஸ்
4) அஸ்ஸாம் முதல்வர் சபானந்த சோனவால்

230] ◆ இந்தியாவின் முதல் டிஜிட்டல் கிராமம் அகோதரா ◆

⁎ குஜராத்தின் அகமதாபாத் நகரில் இருந்து 90 கி.மீ தொலைவில் சபர்காந்தா மாவட்டத்தில் உள்ளது அகோதரா கிராமம்.

- இந்த கிராமத்தில் வாழும் 1,500 பேருக்கும் வங்கிக் கணக்கு இருக்கிறது. 24 மணி நேரமும் வை-பை வசதி வழங்கப்பட்டுள்ளது.
- ஓராண்டுக்கு முன், ICICI வங்கி சோதனை ரீதியாக இந்த கிராமத்துக்கு " ஐ.சி.ஐ.சி.ஐ. டிஜிட்டல் வில்லேஜ் " என்ற திட்டத்தை கொண்டு வந்தது. மொபைல் போன் மூலம் பணப் பரிவர்த்தனை செய்து கொள்வது தான் அந்த திட்டம். அதைத் தான் அகோதரா கிராமவாசிகள் தற்போது முழுமையாக பின்பற்றி வருகின்றனர்.

231] United Nations Commission on International Trade Law (UNCITRAL)

- சர்வதேச வணிக சட்ட ஐ.நா.ஆணையத்தின் பொன்விழா ஆண்டு நிகழ்ச்சிகள் இந்தியாவில் நடைபெற உள்ளது.